www.padippakam.com


# சுமைகள்

சுமைகள் – 16 கார்த்திகை-மார்கழி 1995 Sumaihal Nr. 16, november` desember 1995, Tromsø, Norge Løssalg kr. 10,-


## தொடர்ந்தும்

# மக்களைப் பலவீனப்படுத்துவது அழிவிற்கே வழிவகுக்கும்!



இன்று முரண்பாடுகளைத் தள்ளி வைத்து விட்டு குறைந்த பட்சம் சர்வதேசக் கவனத்தை மக்கள் மீது திருப்பும் அடிப்படையிலாவது அனைத்து சக்திகளும் இணைய வேண்டும். இதற்கு புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் ஜனநாயக அடிப்படையில் முரண்பாடுகளைத் தள்ளி வைத்து விட்டு மக்களுடனும், மாற்றுக் கருத்துக்கொண்டவர்களுடனும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தில், யுத்தத்தின் இருதரப்பினரான புலிகள், இலங்கை அரச இராணுவத்தைவிட பொதுமக்களே பாரிய இழப்பை சந்தித்து வருகின்றனர். புலிகளைப் பொறுத்தளவில் தம்கட்டுப்பாட்டிலிருந்த குடாநாட்டை இராணுவத்தினரிடம் இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்ட போதும் படையணியின் உயிர்சேதம் மிகவும் குறைவானதே. இலங்கை அரசின் பிரச்சார வெகுசன தொடர்புச் சாதனங்கள், புலிகளின் உயிரிழப்பை பல்மடங்கு கூட்டி செய்திகள் வெளியிடுவதுடன் வழமைபோல தமது பக்கத்தின் உயிர் பொருட் சேதத்தை கூடிய அழவிற்கு சிறிது படுத்தி தமது பிரச்சாரத்தை மேற்கோள்கின்றன. இதே போல் தான் புலிகளும் வெளிநாடுகளில் செய்து வருகின்றனர்.

கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில் இலங்கை அரசு பாரிய உயிரிழ்பைச் சந்தித்து வருகின்றது. கொழும்பு பொது மருத்துவமனைப் பிரதேசம் இராணுவமயப் படுத்தப்பட்டுள்ளதுடன் மருத்துவ மனைக்கும் விமான நிலயத்திற்கும் இடையிலா அப்புலன்ஸ் வண்டிகளின் போக்குவரத்தானது மேற்படி உயிரிழ்புக்களையும் சேதங்களையும் உறுதிப்படுத்துகின்றன. இது மாத்திரமன்று அனுராதபுரம் இராணுவ வைத்தியசாலையும் பாவிக்கப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க நாம் முன் குறிப்பிட்டது போல் பாரிய உயிர் பொருட் சேதங்களை சந்திப்பவர்கள் மக்களே ஆவர். இதுவரை எவராலும் மக்களின் உயிரிழப்புப் பற்றி சரியான தகவல் வெளியிடப்படவில்லை. யாழ் நகரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள்

தொடர்8–பக்–

# புலிகளின் பெயரால் அராஜகம்!

கடந்த 24.10.95 செவ்வாய் கிழமை மாலை வார்டோ பாடசாலை மண்டபத்தில் தமிழ் சங்க நிர்வாகக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அங்கு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு (Itte) வார்டோகிளைப் பொறுப்பாளர் எவ்வித அனுமதியுமின்றி பாடசாலை மண்டபத்திற்குள் நுழைந்து தமிழ்சங்க நிர்வாகி ஒருவரை கதிரையில் இருந்து தள்ளிவிழுத்தி மிருகத்தனமாகத் தாக்கிய அனாகரிகச் சம்பவமானது மிகவும் வன்மையாக கண்டனத்துக் குட்படுத்தப் படுவதோடு இன்று தமிழர்கள் மத்தியில் பலவிதமான வினாக்களையும், விவாதங்களையும் தோற்றுவித்துள்ளது.

தொடர்6–பக்–

உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்! Arbeidere og undertrykte i alle land - foren dere!

www.padippakam.com



சுமைகள்

# சுமைகள் புலிகளுக்கு

**புலிகளை விமர்சிக்க வெளிநாட்டுப் புலிப்பிரமுகர்களை விட எமக்கு மேலான உரிமையுண்டு, கட்மையுண்டு, தகுதியுண்டு. எமது தேசப்பற்றிற்கு மரணம் தான் தண்டனை என்றால் அது தேசத்தில் போராடும் ஒரு சாதாரண போரளியின் தீர்பாக இருக்காது. வெளிநாட்டில் தமது செல்வத்தையும் சுயநலத்தையும் தக்கவைத்துக் கொள்ள சில சுயநல வேடமிட்ட புலிகளை தமது**

இத்துடன் 7 சுமைகள் பத்திரிகை வடிவில் உங்களிடம் வந்துள்ளது. இதுவரைக்கும் வாசகர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 87 கடிதங்கள் ஊடாகவும், நேரடியாகவும், தொலைபேசி மூலமும் விமர்சனங்களும், கேள்விகளும் எம்முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இறுதி இதழான இச்சுமைகளில் (16) உங்கள் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க முயல்கிறோம். இதுவரை எம்மீது வைக்கப்பட்டுள்ள கேள்விகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) நாங்கள் ( சுமைகள் ஆசிரியர் குழு ) யார்?

ஆ) எமக்கு பத்திரிகை நடத்த யார் பணம் தருகின்றனர்? வியாபார ரீதியில் பத்திரிகை நடத்துகின்றோமா?

இ) நாம் வேறு இயக்கப் பிரதிநிதிகளா? அதாவது EPRLF, PLOT, ENDLF, EROS இயக்கப்பிரதிநிதிகளா?

ஈ) நாம் புலிகளின் எதிரிகளா?

உ) புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளிடமிருந்து நாம் எவ்வாறு, எந்த வகையில் வித்தியாசப்படுகின்றோம்?

ஊ) சுமைகள் இலங்கை அரசின் கைக்கூலியா?

**அ) நாங்கள் யார்?**

நாம் எந்த வகையிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. மேலும் இலங்கையில் இலங்கை அரசு, புலிகளால் மட்டும் அல்ல மற்ற இயக்கங்களின் அராஜகத்தாலும், காட்டுமிராண்டித் தனத்தாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். இதன் அர்த்தம் என்னவெனில் எல்லாவகையான முறையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போருக்கு பாடுபட்டவர்கள், பாடுபடுபவர்கள். கருத்து ரீதியிலும், உடல் உழைப்பாலும், பொருளாதார அடிப்படையிலும் தொடர்ந்து இடைவிடாது பாடுபடுபவர்கள். அகதியாகவும், மாணவர்களாகவும் படித்து முடித்துவிட்டு நாடுதிரும்பி போக முடியாமல் கஸ்டப்படும் நாம், எந்த விதத்திலும் நோர்வேயில் எமது வாழ்க்கையை நிலை நிறுத்திக்கொள்ளும் எண்ணம் கொண்டவர்களல்ல. மொத்தத்தில் இங்கு வாழும் சாதாரண தமிழர்களில் நாமும் உள்ளடக்கம். எந்தவிதத்திலும் பெரியவர்களோ அல்லது சிறியவர்களோ கிடையாது. எமக்கு மற்றவர்களைப்போல வேலை முடிந்தும், பாடசாலைமுடிந்தும் வந்து பலருடன் இருந்து அரட்டை அடிப்பதிலும் விட எம்மால் இயன்ற முயற்சியையும், பலரின் கருத்துக்களையும் ஒன்றிணைக்க முற்படுபவர்கள்.

**ஆ) எமக்கு பத்திரிகைநடத்த யார் பணம் தருவது? சுமைகள் வியாபார ரீதியான பத்திரிகையா?**

சுமைகள் இதுவரை ஏழு இதழ்கள் வெளிவந்துள்ளது. எமது உடல் உழைப்பையும், இதற்கு செலவிடும் நேரத்தையும் தவிர்த்து பொருளாதார ரீதியில் பணமாக 70000 குரோணர்களை சுமைகள் வெளியிட செலவிட்டுள்ளோம். இதில் 15000 குறோணர்கள் துரம்சோ FYKLE கலாச்சார நிதியிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளோம். 55000 குறோணர்களில் 35 ஆயிரம் தனிப்பட்ட பணம் நாம் செலவிட்டுள்ளோம். வாசகர்களாகிய உங்கள் பலருக்குத் தொரியும் உங்களில் எத்தனை பேர் சந்தா செலுத்தியுள்ளனர் என்று. நோர்வேயில் வாழும் 85 வீதமான அனைத்து தமிழ் வாசிக்கும் அனைவருக்கும் நாம் சுமை-களை அனுப்பி வைக்கின்றோம். இதில் 5 வீதமானவர்களே சந்தா செலுத்தியுள்ளனர். இந்தொகையானது 4500 குறோணர்களாக்கும் குறைவானது. எமக்கு நாம் தனிப்பட்ட முறையில் செலவிட்ட 35 குறோணர்களை தவிர இன்னும் 15000 குறோணர்கள் அச்சகத்திற்கும், தபால் சேவைக்கும் கடனாளர்களாக உள்ளோம்.

நோர்வேயில் பலலட்சங்கள் தமிழ் மக்களின் பெயரால் நோர்வே அரசிடம் இருந்து தனிப்பட்ட நபர்கள் பெற்று தமது சுயதேவைக்கும், தனிப்பட்ட நலனிற்கும் பாவிக்கின்றனர். (இதை எம்மால் நிருபிக்க முடியும்) அதேவேளை உண்மையில் சுயமுயற்சியில் உழைப்பவர்களுக்கு எங்கேயும் எதுவும் கிடைப்பதில்லை. மேற்கூறிய எமது கடனை நாம் தனிப்பட்ட முறையில் செலுத்துவோம். அல்லது நோர்வேயின் தெருக்களில் உண்டியல் குலுக்கி பணம்சேர்த்து கடனைத்தீர்ப்போம்.

நாம் சுமைகள் நடத்துவதன் மூலம் வியாபாரம் செய்கின்றோம், பணம் சேர்கின்றோம் என குற்றம் சாட்டுபவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் மேற்கூறிய எமது பொருளாதார நிலையை நிருபிப்போம். மேதும் சிலர் புளட், ஈபிஆர்எல்எவ் போன்ற இயக்கங்கள் எமக்கு பணம் தருவதாக பொய்பிரச்சாரம் செய்கின்றனர். இதில் புலிகளின் ஆதரவாளர்கள் பெரும்பான்மையினர்.

எம்மைப் பொறுத்தளவில் சரியான முறையில் அரசியல் நடத்த முடியாத அரசியல் பொறிக்கிகளின் வாச்சவடால் இது. இதை இவர்கள் எக்காலத்திலும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இதைப்பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. எம்மைப் பொறுத்தளவில் புளட், ஈபிஆர்எல்எவ் போன்ற கும்பல்களின் செயற்பாடு தமிழ் மக்களின் சுயநிர்னய உரிமைப் போராட்டத்திற்கு துரோகம் விளைவிப்பது.

**இ)நாம் மாற்று இயக்கப் பிரதிநிதிகள் யார்? அதாவது EPRLF, PLOT, ENDLF, EROS........... இயக்கப்பிரதிநிதிகளா?**

எம்மைப் பொறுத்தளவில் மேற்கூறிய இயக்கங்கள் உண்மையில் தேசபக்த சக்திகளாக ஒருகாலத்தில் செயற்பட்டவை. இவர்கள் மீதான புலிகளின் பாசிசமும், தலமைகளின் பதவி மோதல்களும் அமைப்புக்களைச் சீரளித்தது. இன்று சுயநிர்ணய உரிமைப்போரில் இவர்கள் இலங்கை அரசுடன் இணைந்து நிற்பதன் மூலம் துரோகத் தனநிலையை அடைந்துள்ளனர். அதேவேளை இவ்வியக்கங்களின் போராட்டத்தின் ஆரம்பகாலப் பங்களிப்பும், தியாகமும் இன்று புலிகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட போதும் அவை வரலாற்றில் குறிக்கப்படவேண்டியவை.

எம்மைப் பொறுத்தளவில் புலிகளின் பாசிசமும், மேற்படி இயக்கங்களின் துரோகத்தன நடவடிக்கைகளும், வித்தியாசமானவை என்றாலும், போராட்டத்திற்கு ஒரேமாதிரியான விளைவையே ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் நடமுறையான தமது கருத்துக்கு மாற்றுக் கருத்தைக் கொண்டவர்களை தடை செய்வது, கொலைசெய்வது, மிரட்டுவது போன்ற ஜனநாயக எதிர்ப்பு எந்த அளவுக்கு சுயநிர்ணய உரிமைப் போரில் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளதோ, அதே விளைவை மேற்படி இயக்கங்களின் துரோகத்தனமும் ஏற்படுத்தி உள்ளது.

மேலும் மேற்படி சீரழிந்த இயக்கங்கள் மக்கள் மத்தியில் வெகுவாக அம்பலப் படுத்தப்பட்ட பின்னும், நாம் எமது சக்தியை வீணடித்து, மென்மேலும் விமர்சிப்பது எந்தவோர் விளைவையும் ஏற்படுத்தாது. அந்தவகையில் சுமைகளி இவ்வியக்கங்கள் மீதான நேரடி விமர்சனங்கள் எழுதப்படவில்லை. மேலும் மேற்படி குழுக்களுடன் இணைவதென்பதுவும், அவர்களுக்குப் பத்திரிகை நடத்துவது என்பதுவும் எமது நோக்கம் அல்ல. அல்லது நாம் அரசியல் தற்கொலை செய்து கொள்ளத் தயாராக இல்லை.

**ஈ) சுமைகள் புலிகளுக்கு எதிரானதா?**

எம்மைப் பொறுத்தளவில் புலிகளின் அரசியல் "தத்துவ" அடிப்படையும்; எமது அடிப்படையும் முற்றுமுழுதாக முரணானது. இதனடிப்படையில் நடைமுறை ரீதியான அரசியல் முரண்பாடும் எமக்கிடையில் உண்டு. ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்று வரும்போது ஏமக்கும் புலிகளுக்கும் உடன்பாடு உண்டு. புலிகளுடன் இணைந்துள்ள இளைஞர்கள், யுவதிகள் ஏன் போராளிகளாக மாறியுள்ளனர். ஏன் தம் உயிரை இழந்தும், உடல் உறுப்புக்களை இழந்தும் போராடுகின்றனர். இலங்கை அரசின் சிறுபான்மை இனங்கள் மீதான ஒடுக்குமுறைதான் காரணம். இதை நாம் உணராதவர்கள் அல்ல. நாம் எந்தக்காலங்களிலும் மேற்படி போராழிகளின் உயிரிழப்பையும், அங்கவீன நிலையையும், வெற்றியையும் கொச்சைப் படுத்தியது கிடையாது.

அதேவேளை புலிகளின் தலைமையின் பாசிசப் போக்கையும், அரசியல் தவறையும் விமர்சிக்கின்றோம். இதில் புலிகளின் தலைமைக்கு உடன்பாடு இருக்க வேண்டிய தேவையில்லை. புலிகளின் தலைமையை விமர்சித்து உயிரிழந்த பலரையும் நாம் அறிவோம். மேலும் எந்த மனித நடவடிக்கைக்கும் விமர்சனமானது, பாராட்டின் அடிப்படையிலோ அல்லது, தவறைச் சுட்டிக்காட்டும் அடிப்படையிலோ இருக்குமானால் அதுவும், செயற்பாட்டையும் கொண்ட குறிக்கோளையும் வென்றெடுக்க உதவுமானால் அது முக்கியமான தேவையாகும். இதனை ஜனநாயகக் கருத்துப்பிரயோகம் எனலாம்.

நாம் எந்தக் காலத்திலும் புலிகளை ஒழிப்பதற்கோ, அழிப்பதற்கோ விமர்சனம் செய்வதில்லை. மக்களின் நலனின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் நோக்கத்தை நிறைவு செய்யும் விவாத அடிப்படையிலேயே விமர்சிக்கின்றோம்.

மொத்தத்தில் சுமைகள் பத்திரிகை, புலிகளையோ அல்லது வேறு சக்திகளையோ சுயநிர்ணயப் போரில்

வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $

**Redaksjon:**
Sumaihal redaksjonskommite med dyktig støtte av Ulrik M. Gjølstad og Sturle D. Tvedt, t.siva,a.mari
**Produksjon og distribusjon:**
Sumaihal aktivistgruppe - Norge.

**Layout og produksjonsansvarlig:**
Henrik Ormåsen.
**Trykk:** Bladet Tromsø i et opplag på 2000
**Postadresse:**
Boks 415, 9001 Tromsø

படிப்பகம்

www.padippakam.com



# எதிரானதா?

துரோகம் விளைவிக்கும் சக்தியாகக் கருதினால் அது துரோகத்தனத்தை சுட்டிக்காட்டியபடியே இருக்கும். நோர்வேயைப் பொறுத்தளவில் புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் எம்மைப்பற்றி பல தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். இச் செயற்பாடானது பல தேவையற்ற முரண்பாடுகளை உண்டு பண்ணியுள்ளது. இதனை மக்கள் முன் பகிரங்கமாகவே தெரிவிக்கின்றோம். அதேவேளை எமது உயிருக்கு ஆபத்து வரலாம் என அஞ்சுகின்றோம். எமது நோக்கம் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான போராட்டம் பற்றிய விவாதங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதேயாகும். எல்லாவிடையத்திற்கும் இருபக்கங்கள் உண்டு. ஒரு மனித நடவடிக்கையை அல்லது அரசியல் செயற்பாட்டையோ பலவளிகளில் நடைமுறைப்படுத்தலாம்.

நாம் நோர்வே வாழ் தமிழ் மக்களை புலிகளுக்கு உதவுவதை நிறுத்துமாறு வேண்டிக் கொள்ளவில்லை மாறாக உதவுவதை அரசியல் அடிப்படையில் ஏன் செய்கிறோம் என்னும் தெளிவின் அடிப்படையில் உதவுமாறு வேண்டிக்கொள்கின்றோம். போராட்டத்திற்கு உதவி செய்ய முற்படுபவனை எமது பத்திரிகை இன்னும் கூடுதலாக, மேலதிகமாக ஓர் அரசியல் கண்ணோட்டத்துடன் உதவுவதற்கு வழிவகுக்கம் என்பது எமது நம்பிக்கை.

புலிகளின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இனப்பிரச்சனை பற்றி பிரச்சாரம் பண்ண என்ன உரிமை உண்டோ அந்தளவுக்கு எமக்கும் உரிமை உண்டு. நாம் வெளிநாட்டில் வந்து இங்கிருந்து கொண்டு நியாயம் பேசவில்லை. புலிகளுக்கு நாம் நிதி வழங்குவதில்லை மாறாக எமது தேசத்திற்கு எம்மால் என்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் எமது பெற்றோர் உறவினர்களின் ஊடாகவும், அரசாங்க சார்பற்ற அமைப்புகளுடாகவும் உதவி செய்து கொண்டிருக்கின்றோம். அதேவேளை வெளிநாட்டில் இருந்து எமது பலநாட்கள், பலநேரங்களையும், தேசத்திற்கே செலவிட்டுள்ளோம்.

இதனடிப்படையில் புலிகளை விமர்சிக்க வெளிநாட்டுப் புலிப்பிரமுகர்களை விட எமக்கு மேலான உரிமையுண்டு. கடமையுண்டு. தகுதியுண்டு. எமது தேசப்பற்றிற்கு மரணம் தான் தண்டனை என்றால் அது தேசத்தில் போராடும் ஒரு சாதாரண போராளியின் தீர்ப்பாக இருக்காது. வெளிநாட்டில் தமது செல்வத்தையும் சுயநலத்தையும் தக்கவைத்துக் கொள்ள சில சுயநல வேடமிட்ட புலிகளை தமது சுயநலத்திற்குப் பாவிக்கும் கொலை வெறியர்களின் தீர்ப்பாகவே இருக்கும்.

இன்று தேசத்தில் நடைபெறும் போரில் மக்கள் நலனைக் காக்க இன்று நாம் அனைவரும் ஜனநாயக அடிப்படையிலாவது ஒன்றிணைய வேண்டும். இதுவே தொடர்ந்த போராட்டத்திற்கு நல்லது.

ஜனநாயக அடிப்படையில் மக்கள் நலனை முன்னிறுத்தி ஒன்றிணைந்து செயற்பட போராட்ட முனைப்புக் கொண்ட சக்திகளையும், புலிகளையும் (தமது பாசிசப் போக்கை கைவிட்டநிலையில்) வேண்டுகோள் விடுக்கின்றோம். சர்வேதேச நாடுகளிலாவது நாம் சில கருத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவது தற்போதைய கடமையாகும்.

மேலும் புலிகளின் பெயரால் சுமைகளுக்கு மிரட்டல் கடிதங்கள், தொலைபேசி மிரட்டல்கள் வந்தவண்ணம் உள்ளது. இச்செயற்பாட்டிற்கு உண்மையில் புலிகளின் நோர்வேகிளை பின்னணியில் உள்ளனரா? இல்லையா என தெரிவிக்குமாறு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**உ) சுமைகள் ஆசிரியர்குழு புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள், இலக்கிய வாதிகளில் இருந்து எந்தவகையில் வித்தியாசமானது?**

நாம் பலவழிகளில் வித்தியாசமானவர்கள். மேற்படி எழுத்தாளர்கள் பலர் மக்களுக்கு விளங்காத கதை, கவிதை, கட்டுரை என தம்மைமேதாவிகளாக காட்டுவதற்காக எழுதுகின்றனர். இவர்களின் எழுத்துக்களை வெளியிடுவதற்கென்றே சில 'இலக்கிய' 'அரசியல்' பத்திரிகைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் வெளிவருகின்றன. இவ்வெளுத்தாளர்கள் எம்மையும், எம்பத்திரிகையான சுமைகளையும், பலவளிகளில் எதிர்க்கின்றனர். தமது நடைமுறைக்கு உதவாத சுயதம்பட்ட இலக்கியத்தை சுமைகள் பிரசுரிக்க மறுப்பதை சாட்டாகக் கொண்டு சுமைகளை, பலவிதத்தில் விமர்சிக்கின்றனர். மேலும் நாம் இலக்கியவாதிகள் அல்ல. எமக்குத் தெரிந்ததை நாம் எழுதுகிறோம்.

நாம் தமிழ் தெரிந்த பண்டிதர்கள் அல்ல. இரண்டைவேடம் போட்டுக்கொண்டு, எழுதுவது ஒன்று வாழ்வது வேறோன்றுமாக வாழும் பொய்யர்கள் அல்ல நாம். எமது புகழையும் பெயரையும் விளம்பரப் படுத்துவதற்காக நாம் சுமைகள் வெளியிடவில்லை. மேற்படி இலக்கிய வாதிகளோ தம் செந்தக்காசில் கவிதைகளையும், கதைகளையும் அச்சிட்டு தம் புகளைப் பரப்புகின்றனர். மேலும் இம்மேதாவிகளை சாதாரண மக்களுக்கு யார் என்று தெரியாது. ஒரு சில பிரதிகளை அச்சிட்டு தமக்குள் தாமே வாசித்து மாறிமாறி (முதுகு செறிவது போல) பாராட்டிக் கொள்வர். ஒருவரின் வெளியீட்டுக்கு மற்றவர் விமர்சனம் எழுதுவதும், பின்பு முன்னையவர் பின்னையவரின் வெளிமீட்டுக்கு புகழ்பாடுவதும் இவ்எழுத்தாளப் பெருச்சாளிகளின் வழமை. மேலும் இவர்களைப் புகழ்வதற்கு ஐரோப்பாவிலும், கனடா, இந்தியாவிலும் பலவெளியீடுகள் வருகின்றன.

இவ்வாறான பல சஞ்சிகைகளில் இருந்தும் நாம் வேறுபடுகின்றோம்.எமது ஐரோப்பிய சகோதரச் சஞ்சிகைகளான சஞ்சீவி (டேன்மார்க்), சக்தி (நோர்வே), சமர்(பிரான்ஸ்) (மற்றும் பல பொருளாதாரக் காரணிகளால் வெளிவரவில்லை) போன்றவற்றுடன் சில கருத்துகள் அடிப்படையில் முரண்பட்ட போதிலும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்ற விதத்தில் விவாதிக்கின்றோம். அதேவேளை நாம், சஞ்சீவி (சஞ்சிகை) குறிப்பிடுவது போன்று "மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப் போனதொரு சுதந்திரமான கருத்துப் பரிமாற்றலை உருவாக்குவதற்கு எல்லோரது கருத்துக்களும், விமர்சனங்களுமே வழிவகுக்கும்" என்பதை நம்புகின்றோம்.

**எ) சுமைகள் இலங்கை அரசின் கைக்கூலியா?**

சுமைகள் ஒருபோதும் எந்த ஒரு அரசிற்கும் கைக்கூலியாக இருந்ததும் இல்லை, இருக்கப்போவதும் இல்லை. நாம் பலதடவைகள் இலங்கை அரசை விமர்சித்திருக்கின்றோம். அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தையே நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன்மேல் எமக்கு நம்பிக்கையும் இல்லை., ஆனால் மக்கள் நலனின் அடிப்படையில் இடைக்காலத் தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்தி வருகின்றோம். நாளாந்தம் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின் துன்பத்தை, ஐரோப்பா வாழ்கையில் இருந்து பார்த்தால் புரியாததும், விளங்கிக் கொள்ள முடியாததும் கூட. அங்கு துன்பப்படும் மக்கள் என்றாவது தமது உயிர் பறிபட்டுவிடுமோ என்ற அவநம்பிக்கையில் வாழ்பவர்களுக்கு ஒரு புத்துணர்வையும் ஒய்வையும் கொடுக்கவே நாம் இடைக்காலத் தீர்வு அவசியம் எனக்கருதுகின்றோம். அப்படிக் கருதுவது அலங்கை அரசின் கைக்கூலிஎன்றால் காலத்திற்கு காலம் புலிகள் இலங்கை அரசுடன் கொஞ்சிக் குலாவுவது என்னவென்று கூறப்போகின்றீர்கள்? புலிகளின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கொண்ட அனைத்துப் பத்திரிகைகளையும் ஒன்றில் மற்றஇயக்கங்களின் பத்திரிகை என முத்திரை குத்துவது அல்லது இலங்கை அரசின் கைக்கூலி என முத்திரை குத்துவது உண்மையில் கருத்தை கருத்தால் வெல்லமுடியாதவர்களால் அல்லது தம் கருத்தின் மீது சரியான நம்பிக்கை அற்றவர்களாலே தான் இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன. இலங்கை அரசின் கைக்கூலிகள் நாம் எனக் கூறும் நீங்கள் இங்கு வாழும் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் புலிகளின் தலைமையில் உள்ளதை என்னவென்று கூறுப்போகின்றீர்கள்? முதலில் மாற்றுக் கருத்து ஒன்று உண்டென்றால் அதைப்பற்றி சிந்தித்து அதில் என்ன சொல்லப்படுகின்றது என அறியமுற்படுங்கள் அதைவிட்டுவிட்டு வாய்கு வந்தபடி பேசுவது எந்தவிதத்திலும் ஆரோக்கியமான விளைவைத் தரப்போவதில்லை.

அன்பான வாசகர்களே
தயவுசெய்து மனமுவந்து உங்கள் சந்தாப் பணத்தை எமக்கு அனுப்பி வையுங்கள். உங்களது உதவி நாம் கடனாளியாவதைத் தடுப்பதுடன் தொடர்ந்தும் சுமைகள் வெளிவர உதவும்.

எமது வங்கி கணக்கிலக்கம்
82454059545

எமது தபால் வங்கிக் கணக்கிலக்கம்
08260868293

எமது விலாசம்
Postboks 415, 9001 Tromsø

மீண்டும் 1996சந்திப்போம்
நன்றி

இன்ரநெற்றில்(Internett)சுமைகள்1996தை மாதம் வெளிவருவுள்ளது

படிப்பகம்

www.padippakam.com



# யாழ் குடாநாடு மக்களின்றி இரா
# நிலையில் ,அதன

**இன்று யாழ் குடாநாடு பறிபோய்விட்ட (மக்கள் அற்ற யுத்தப்பிரதேசம்) நிலையில் மக்கள் ஒரு பங்காளியாக மாறுகின்ற வாய்ப்பை புலிகளின் போக்கு அனுமதிக்காது. யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற எடுக்கும் முயற்சியில் மக்களின் பங்களிப்பு இன்றி முஸ்லீம், சிங்கள மக்களின் அனுதாபம் இன்றி இந்திய மக்களின் பங்களிப்பு இன்றி சர்வதேச ஆதரவு இன்றி பரந்த எதிர்ப்புத் தளத்தில் புலிகள் தனிமைப்பட்டு உள்ள போக்கில் மீளக் கைப்பற்றுவது சாத்தியம் இல்லை.**

யாழ் குடாநாட்டின் மீதான இராணுவ அழிப்பு ஒழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக மக்கள் முற்றாக அப்பிரதேசங்களை விட்டு வெளியேயதும், புலிகள் உள்ளார்ந்த எதிர்ப்புகளைக் காட்டியும் வரும் இன்றைய நிலை என்பது யாழ் குடாநாடு இனவெறி வாதிகள் கைப்பற்றியதை பறைசாற்றுகின்றது. புலிகளின் எதிர்ப்பு தற்காப்பு யுத்தவழிகள் ஊடாக பின்வாங்கிச் செல்லும் நிலைக்குள் நகர்ந்த வண்ணம் உள்ளது.

இந்தநிலையில் யாழ் குடாநாட்டின் யுத்த வரலாற்றை மீள ஒருமுறை பார்ப்பதன் ஊடாக மட்டுமே இன்றைய அதன் தோல்விகளை இனங்காணமுடியும். இராணுவம் வெளியேற முடியாத தளப்பிரதேசத்தை 1985 இல் யாழ் குடாநாடு பெற்றது என்பது ஒரு தற்செயல் விபத்தாகவே இருந்தது.

1985 திம்புப் பேச்சுவார்த்தையையும், அதன் போது ஏற்பட்ட நிபந்தனையில் இராணுவம் முகாமை விட்டு வெளியேறக் கூடாது என:ற அவ்விடயம் பின்னால் இராணுவத்தை முற்றாக முடக்கி வைத்தது. திம்புப் பேச்சு வார்த்தையின் பின் மீள உருவான யுத்தம், இராணுவம் யாழ் குடாநாட்டில் மீளவும் வெளிக்கிட முயற்சித்தபோது தற்செயலாக ஒரு புளட் உறுப்பினர் தெல்லிப்பழையில் எதிர்கொண்டு சுடத் தொடங்க அது பின் அது ஒரு யுத்தமாக வெடித்தது. அவ்யுத்தம் எல்லா யுத்தத்தையும் விட வித்தியாசமானதாகவும், தமிழ் மக்களின் ஒரு பாரிய ஒத்துழைப்புடனும் நடைபெற்றது. அவ்யுத்தத்தில; PLOT, TELO, LTTE, EROS, EPRLF, TEA பல்வேறு சிறிய பெரிய குழுக்கள் ஒன்றுடன் ஒன்று இனைந்து இராணுவத்தை சுற்றி நின்று தாக்கி அவர்களை பின்வாங்க வைத்தனர். அத்தாக்குதலில் TELO மிக்க பலமானதாகவும், பல்வேறு நவீன ஆயுதங்களையும் பயன்படுத்தினர்.

இம்மோதல் இராணுவத்தையும் சிறிலங்கா இனவெறி அரசையும் கதிகலங்க வைத்ததுடன் மனோரீதியான ஒரு பயத்தையும் பெற்றுக் கொண்டனர். வழமையான ரோந்துகளில் தீடீர் தாக்குதலைச் சந்தித்து வந்த இராணுவம், தாம் முகாமை விட்டு வெளியே வரின் தம்மை நோக்கி குண்டுகள் பாயும் என்ற நிலை, இராணுவத்தை மனோரீதியாக பயங்கொள்ள வைத்தது. பிந்திய காலத்தில் இது போன்று இராணுவம் வெளியேற பல முயற்சிகள் முயன்ற பொது எல்லா இயக்கங்களும் எதிர்த்து தாக்குதலை நடத்தினர். இந்த வகையில் அவர்களுக்கிடையில் ஏதோ ஒரு ஒத்துழைப்புடன் செயல்கள் அமைந்திருந்தன.

ஆனால் இயக்கங்களின் உள்ளார்ந்த பலம் என்பது வெறும் பூச்சியமாகவே இருந்தது. இந்தியாவாலும், ஏகாதியத்தாலும் வீங்க வைக்கப்பட்டு, ஆயுத பாணியாக்கப்பட்ட இந்த இயக்கங்கள் உண்மையில் யாழ் குடாநாட்டை தளப்பிரதேசமாக்கிய வடிவமும் ஒரு வீக்கமான வடிவமேயாகும். சிங்கள இனவெறி அரசின் இராணுவம் பலத்த எதிர்தாக்குதலை நடத்த பலம் இன்மையும், ஒரு கூலிப்பட்டாளமாக அன்றாட உழைப்பில் மட்டுமே இணைந்த இந்த இராணுவம் எதிர் தாக்குதல் நடத்தும் வகையில் முன்னேற முடியவில்லை.

இது யாழ் குடாநாட்டை கைப்பற்றி வைத்திருந்த விடுதலை இயக்கங்களுக்கு சாதாரணமாக இருந்ததுடன் தாம் வீங்கியிருந்த போக்கை மறைக்கவும் முடிந்தது. இதில் இருந்து புகைந்து கொண்டிருந்த உள் இயக்க மோதல்கள், ஒரு பிரதேசத்தை சொந்தமாக்கும் ஒரு குறிக்கோளுடன் ஒன்றை ஒன்று தாக்கத் தொடங்கியதும், அதில் புலிகள் முதன்மை ஸ்தானத்தைப் பெற்றனர். இயக்க அழிப்பில் ரெலோ உடன் புலிகளின் மோதல் ஒரு பாரிய மோதலாக இருந்தது. ரெலேவினர் சரணடைய மறுத்து எதிர்தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் ரெலோவின் வீக்கம் புலியை விட அதிகமாக இருந்ததும், இவ்வீக்கம் இராணுவ அமைப்பின் கட்டுப்பாட்டை தகர்த்ததனால் புலிகளிடம் .ரெலோ தோல்வியடைந்தது.

இந்த யுத்தம் நடந்த நிலைகளில் கூட இராணுவம் வெளியேறாமல் புலிகளுக்கு சார்பாக இயங்கின. ரெலோவின் இந்திய சார்பையும், சிங்களஅரசு மத்தியில் இருந்த இந்திய எதிர்ப்புணர்வும், ரேலோவை அழிக்க விரும்பிய இலங்கை அரசும், புலி தனிமைப் படுவதன் மூலம் யாழ்பாணத்தைக் கைப்பற்ற முடியும் என்ற இலங்கை அரசின் கணிப்பும் தான் ரெலோவை அழிக்க அரசு புலிகளுக்கு ஒத்துழைத்தது. இந்த ரெலோ, புலிகள் யுத்தம் நடந்தபோது இராணுவம் வெளிக்கிட்டிருப்பின் இன்றைய நிலை வேறுபட்டதாகவே இருந்திருக்கும்.

புலிகள் ஒவ்வேரு இயக்கத்தையும் அழித்து தாம் மட்டுமே என்ற நிலையில் வீங்கிப் பெற்ற தளப்பிரதேசத்தையும், அதில் ஏற்பட்ட அதிகாரத்தையும் தக்க வைக்க முனைந்தனர். இதன் போது தம்மை போலியாக வீங்க வைத்தும் அதில் இருந்து தம்மை பாதுகாக்க பல மக்கள் விரோதச் செயல்களை தொடர்ச்சியாகச் செய்யத் தொடங்கினர்.

அந்தவகையில் முன்னைய மாற்று இயக்க அங்கத்தவர்கள் சாதாரண வாழ்வுக்கு திரும்பியிருந்த போதும் அனைவரும் அழிக்கப்பட்டனர். எல்லாச் சிறு இயக்கங்களினதும் அனைத்து சிறு உறுப்பினர்களும் அழித்து ஒழிக்கப்பட்டனர். உள் இயக்க முரன்பாட்டால் பலர் அழித்து ஒழிக்கப்பட்டனர். தமிழ் பேசும் மக்களின் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, அதை மீறுபவர்களும் அழிக்கப்பட்டனர். முஸ்லீம் மக்களை கிராமம் கிராமமாக படுகொலை செய்வதும், பிரதேசத்தை விட்டு வெளியேற்றுவதும் என ஒரு இனஅழிப்பில் ஈடுபட்டனர். சிங்கள அப்பாவி மக்களை குறிவைத்து தாக்கியதன் மூலம் குழந்தைகள், பெண்கள் என அனைவரும் அழித்து ஒழிக்கப்படுகின்றனர். இந்தியாவில் தமது இராணுவ நடவடிக்கையை விஸ்தரித்ததன் மூலம் இந்திய மக்களின் எதிர்பை சம்பாதித்துள்ளனர். மற்றும் மேற்கு நாடுகளில் வன்முறை, மிரட்டல், படுகொலையை செய்வதன் மூலம் மேற்கு நாடுகளில் அன்னியப்பட்டு வருகின்றனர்.மொத்தத்தில் புலிகள் எல்லாத்தரப்பிலும் தாமாகவே தம்மை அன்னியப்படுத்தி மேலும் மேலும் தம்மை வீங்கவைத்து வந்தனர்.

இதேநேரம் அரசு தன்னை மேலும் உறுதியான பலமான தளத்தில் பலப்படுத்தி உள்ளது. இதை புலிகளின் தவறான நடவடிக்கைகள் வேகமாக ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. அரசு இன்று ஒரு ஜனநாய வேடம் இட்டுள்ளது. சமாதனாத்தின் பிரியராக தன்னை தகவமைத்துள்ளது. சர்வதேச ரீதியில் பரந்த ஆதரவைப் பெற்றதுடன் சமாதானப் பிரியராக தன்னை நிலைநிறுத்தி உள்ளது. புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி தப்பிய இயக்கங்கள், மக்கள் எனப் பலரை அரசு வென்றெடுத்து தன்னை பலப்படுத்தி உள்ளது. அரசை ஆதரிக்கும் (துரோகம்) ஒரு நிலையை அரசு ஏற்படுத்தி உள்ளது. இந்தியா அரசு தமிழீழ விடுதலைக்கு எதிராக கருத்துக் கூறும் அளவுக்கு புலிகள் ஏற்படுத்தினர். முஸ்லீம், சிங்கள மக்களின் சொந்தப் பாதுகாப்புக்குக் கூட அரசை நாடவைத்தனர். இப்படி எண்ணில் அடங்காத பலவிடையம் இரசுக்கு இன்று சாதகமானதாக மாறியுள்ளது.

இன்நிலையில் தான் நாம் இன்று யாழ் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றும் நிகழ்வுகளை அவதானத்துக்கு உட்படுத்த வேண்டும். புலிகளின் பின்னடைவும் அரசின் முன்னேற்றமும் ஒரு தற்செயல் யுத்தம் சார்ந்த விடையமல்ல. மாறாக யுத்தத்தின் தீர்க்கமான பல்வேறு காரணிகள் பங்காற்றி உள்ளன. மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட புலிகள், மக்களின் தற்காப்பு எல்லைக்குள் மட்டும் ஒரு அற்ப ஆதரவையும் பெற்று வந்த நிலை, புலிகளை அன்னியப்பட்ட ஒரு இராணுவ ஆட்சியை தளப்பிரதேசத்தில் நடத்தினர். தளப் பிரதேசம் உருவாகமுன் மக்கள் பெற்றுவந்த சாத்தாரண கருத்துச் சுதந்திரம் புலிகளின் தளப்பிரதேசத்தில் மறுக்கப்பட்டது. மக்களை வெறும் பார்வையாளராக இருக்கக் கோரிய புலிகளின் நடவடிக்கை மக்கள் வெறுமையாக சூனியத்தைப் பார்க்கும் வைகையில் மாற்றப்பட்டனர். இராணுவம் தாக்குதல் நடக்கும் போது தப்பிச் செல்லல் என்ற ஒரு முடிவை மட்டுமே அவர்கள் நேர்த்தியான எப்பொழுதும் எடுத்த ஒரு பாதையாகும். தமிழீழப் பிரதேசத்தைவிட்டே சென்று விடவேண்டும் என்ற உணர்வைக் பெற்ற மக்களைக் கூட தடுத்தது நிறுத்தி வைத்திருப்பது பாஸ் திட்டம் மட்டுமே. மற்றும் பிரதேசத்தை விட்டு வெளியேறின் சொத்துக்களை புலிகளிடம் கொடுக்க வேண்டும் என்ற நிலை. இவைகள் தான் தமிழ் மக்களின் பெரும்பகுதியை இன்று யாழ் குடாநாட்டில் முடக்கியுள்ளது.

யுத்தம் தீவிரமடைய மக்கள் ஒரு இனவெறி அரசு உள்ள பிரதேசத்திற்குள் குடிபெயர்கின்றனர். இது புலிகளின் பிரச்சாரத்துக்கு ஒரு முரண் நிலையாகும். இந்நிலையில் புலிகளின் பிரச்சாரம் குழந்தைகளை நோக்கி வேகமாக நகர்ந்தமையும் அவர்களை ஆயுதக் கவர்ச்சியுடன் கூடிய மிகையான அழுத்தங்கள் மூலம் இணைக்கப்படுகின்றனர். இதன் மூலம் புலிகள் வேகமாக வீங்கிச் செல்கின்றனர். யாழ் குடாநாட்டை கைப்பெற்ற வேண்டும் என அரசு திவிரமாக முனைப்பெற்ற போக்கு ஒரு சர்வதேச ஆலேசனையுடன் நிறைவு பெற்றுவிடும் என்ற நிலை இன்று. யாழ் குடாநாட்டுப் போராட்டமாகவே வளர்ச்சி பெற்ற தமிழீழப் போராட்டம் தான் அதன் போக்கில் தீவிரமாக உறுதிசெய்துள்ளது.

இன்று உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி தமிழீழக் குரலாக பிரதிபலிப்பது யாழ் குடாநாட்டு, யாழ் குரலாகவே உள்ளது. கடற்படை, ஆகாயப்படை, ஆட்பலம், நிதிப்பலம் குட்டி பூர்சுவா தகவலமைப்பு எல்லாம் புலிகளின் யாழ்குடாநாட்டு ஆதாரத்தின் மீதே உள்ளது என்பதை அரசுக்கு சரியாக ஏகாதிபத்தியங்கள் இனங்காட்டியுள்ளது. எனவே யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் புலிகளின் பரந்த செயல்தளத்தை இல்லாதொழிப்பதன் மூலம் புலிகளை சிங்கள இனவாதத்திற்கு இசைவான வகையில் ஒரு ஒப்நத்தை ஏற்படுத்திக்கொள்ள நிற்பந்திக்க முடியும் எனவும் இனங் கண்டுள்ளனர்.

எனவே யாழ்குடாநாட்டைக் கைப்பற்ற இராணுவம் மூலம் உபாயத்தை வகுப்பதில் ஏகாதிபத்தியங்கள் முன்னின்றன. இந்த வகையில் கிழக்கில் இருந்து பல முகாம்களை மூடியும் இராணுவத்தை யாழ்குடாநாட்டில் குவித்தது. புலிகள் கிழக்கு நோக்கி நகர்ந்து இராணுவத்தைத் தாக்கினர். இந்த நிகழ்வு ஒரு தற்செயல் என்பதை விட இதன் போக்கில் ஆழ்ந்த யுத்ததந்திர நோக்கம் வெளிப்பட்டுள்ளது. இராணுவத்தின் முதலாவது தாக்குதல் மானிப்பாய், சுண்ணாகம் என்ற விரிவுபட்ட இத்தாக்குதலலால் மக்கள் வெளியேற்றமும், பின் இராணுவம் பின்வாங்கிய நிலையும் ஏற்பட்டது. இதில் புலிகள் பின்வாங்கியதும், பின் முன்னேறித் தாக்கியதும் என பல்வேறு நோக்குகள் உள்ளிருந்த போது இப்பிரதேசம் ஒரு இராணுவ சூனியப் பிரதேசமாக மக்கள் இன்றி புலிகள், இராணுவம் என மாறியது. இதன்போதே மக்கள் இல்லாததனால் புலிகளின் தேல்வியும், மக்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறும் நிலையும் ஏற்பட்டுள்ளதை கோடுபோட்டுக் காட்டியது. இந்நிலையில் கூட புலிகள் கிழக்கு நோக்கி நகர்வின் தவறான பாதையை அலர்கள் இனங்காணவில்லை. நடந்து கொண்டிருக்கும் இன்றைய தாக்குதல் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அரசும், புலியும் மாறிமாறிக் கூறிவரும் இன்றைய நிலையில் நாவற்குழி உள்ளார்ந்த யாழ்குடா நாடு (அதாவது வடமாராட்சி, தென்மாராட்சி தவிர்ந்த பகுதி) ஒரு இராணுவ சூனியப்பிரதேசமாக மாறியுள்ளது.

மக்கள் முற்றாக வெளியேறியதும், யாழ் செயலகம், கல்வி என அனைத்து நிறுவனமும் இடம்பெயர்ந்ததுவும் இதைக் கோடிட்டுக் காட்டுகிறது.. இந்த

படிப்பகம்

www.padippakam.com



# வ சூனியப் பிரதேசமாக மாறிவரும் மீதான கேள்விகள்.

யுத்தத்தில் தமிழ் மக்கள் ஏதோ ஒரு விதத்தில் தமது பிரதேசத்தை இழந்து விட்டனர். ஆனால் புலிகளை இப்பிரதேசத்தில் அழித்தல் என்பது சாத்தியம் அற்றது. ஏனெனின் என்னதான் சுற்றி வளைப்பு இருந்தும் ஒரு மிகப்பரந்த பிரதேசம் இவ்விடத்தில் மூலைக்கு மூலை இராணுவத்தை நிறுத்த முடியாது. புலிகள் உள்ளார்ந்த பிரதேசத்தில் நகரும் யுத்தமுறையை இலகுவாக செய்தவண்ணம் இருக்க முடியும் அத்தடன் ஊடுருவவும் முடியும். ஒரு பிரதேசம் என்ற வகையில் புலிகளும், மக்களும் இழந்த போதும் இராணுவம் முழுமையாக தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியாத ஒரு நிலையை அடைவர். இதுமட்டுமின்றி முன்னைய தமது பாதுகாப்புத் தனத்தைக்கூட ஒரு பாதுகாப்பு அற்ற பிரதேசமாக இராணுவம் மாற்றி உள்ளது. ஏனெனின் இரண்டு பாதுகாப்பு அரண்களை கைப்பற்றிய பிரதேசத்தில் இராணுவம் நிறுவ முடியாத நிலைக்குள் சென்றுள்ளது.

இதேநேரம் இன்று துரோகக் குழுக்களாக உள்ள PLOT, EPRLF, EPDP, ENDLF, EROS, TELO என்பன அப்பிரதேசத்தினுள் இறக்கப்படலாம். மக்கள் அற்ற ஒரு பிரதேசத்தில் ஒரு அழித்தொழிப்பு நடவடிக்கை தொடங்கியுள்ளது. யாழ்குடாநாட்டு தாக்குதலின் இன்றைய நிலையில் யாழ்குடாநாட்டை புலிகள் கைப்பற்றி முன்னைய நிலையை அடைவார்கள் என்று எழும்பிவரும் மாயை உண்மையில் சாத்தியமற்றது.

புலிகளின் வரலாற்றில் முகாம்களை முற்றாக நிர்மூலமாக்குதலும் பின் அதை இராணுவம் கைப்பற்றுதலும் என்ற ஒரு தற்காப்பு யுத்தத்தையே நடத்தி வந்தனர். யாழ் குடாநாடு கைப்பற்றி ஒரு பரந்த ஒரு முகாமாக உள்ளார்ந்த சிறிய சிறிய காவலரன்கள் உள்ள பிரதேசத்தை மக்கள் இன்றைய இராணுவ வளையத்தினை கைப்பற்ற எடுக்கும் புலிகளின் முயற்சி என்பது சாத்தியம் இல்லை என்பதுடன் போராளிகளை பலியிடுவதற்கான ஒரு செயலாக மாறிவிடும்.

<u>யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதென்பது புலிகள் கருதும் ஆயுதம், எண்ணிக்கை, பணம் மட்டும் சார்ந்த பிரச்சனை அல்ல. புலிகளின் இருப்பு, யுத்தத்தின் வெற்றி தோல்வி, மக்களிடம் உள்ள உள்ளார்ந்த சுதந்திரத்தின் மீதான வேட்கை மீது சார்ந்தது ஆகும்.</u> சுதந்திரம் என்றால் என்ன? புலிகளின் அகராதியில் சிங்கள அரசிடம் இருந்து பிரிந்த ஒரு தமிழ் பிரிவு ஆட்சியில் ஏறுவதேயாகும். ஆனால் மக்களின் சுதந்திர வேட்கை ஒரு பரந்த தளத்தை கொண்டது.

இந்தியாவோ, இலங்கையோ 1948 இல் பெற்றது சுதந்திரம் அல்ல. நெல்சன் மண்டேலா, அரபாத் பெற்றது சுதந்திரம் அல்ல. மாறாக இருக்கும் ஆட்சிப்பீடத்தில் சொந்த மக்களின் ஒரு பிரதிநிதி ஆட்சி ஏற்பது மட்டுமே நிகழ்ந்தது-அவர்கள் முன்னைய ஆட்சியாளருக்கு சேவை செய்கின்றனரே ஒழிய உண்மை சுதந்திரத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவில்லை. எதிர் காலத்தில் புலிகள் ஆட்சிஏறின் உண்மையான சுதந்திரம் வந்தடைய மாட்டாது. மாறாக புதிய உலக ஒழுங்குக்கே சேவை செய்வர்.

உண்மையான சுதந்திரம் என்பது பல அர்த்தம் சார்ந்தது. முதலில் குறைந்தது அன்னிய ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படுவதைத் தடுக்க வேண்டும். சொந்த சந்தையை, சொந்த உற்பத்தியை, சொந்த கலாச்சாரத்தை, சொந்த மொழியை என அனைத்தையும் தாமே தீர்மானிக்கும் ஒரு அரசைப் பெற வேண்டம். இதுதான் குறைந்த பட்ச சுதந்திர நாடு என மற்றைய நாட்டுடன் ஒப்பிட ஒரு அடிப்படையாகும். சுதந்திர மான மனிதன் என்பவன் சுதந்திரமான நாட்டுடன் தேவையை சமமாக பெறுவதில் சார்ந்துள்ளது.

சுதந்திர நாடு, சுதந்திர மனிதன் என்ற நிலையில் புலிகளுக்கு எந்த அக்கறையும் கிடையாது. மாறாக அவர்கள் இன்று புதிய உலக ஒழுங்கில் அமெரிக்காவின் கீழ் இந்தியா போல், சிறிலங்கா போல், தமிழ் ஈழத்தை ஒரு தமிழன்ஆளும் நவீன காலனியாக மட்டும் வென்று விடவே விரும்புகின்றனர்.

இந்த விருப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பெறாத வகையில் ஏகாதிபத்திய நோக்கை செயல்படுத்த முனையும் போது மக்களின் விருப்புக்கு எதிராக மாறுவதுடன், மக்களை அதன் நோக்கில் அடக்கிவிட வேண்டி ஏற்படுகிறது. <u>இன்று யாழ் குடாநாடு பறிபோய்விட்ட (மக்கள் அற்ற யுத்தப்பிரதேசம்) நிலையில் மக்கள் ஒரு பங்காளியாக மாறுகின்ற வாய்ப்பை புலிகளின் போக்கு அனுமதிக்காது. யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற எடுக்கும் முயற்சியில் மக்களின் பங்களிப்பு இன்றி முஸ்லீம், சிங்கள மக்களின் அனுதாபம் இன்றி இந்திய மக்களின் பங்களிப்பு இன்றி சர்வதேச ஆதரவு இன்றி பரந்த எதிர்ப்புத் தளத்தில் புலிகள் தனிமைப்பட்டு உள்ள போக்கில் மீளக் கைப்பற்றுவது சாத்தியம் இல்லை.</u>

புலிகளின் மேலும் மேலும் தனிமைப்படும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இந்தவகையில் சிங்களக் கிராமங்களில் அப்பாவி மக்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல் பரந்த தளத்தில் எதிர்ப்பை ஏற்படுத்தி வருகின்றது. சர்வதேச ரீதியாக குழந்தைகள், பெண்களின் பாடுகொலைகளை செய்தியாகவும் படமாகவும் வெளியிடப்பட்டு ஒரு விடுதலைப் போராட்டம் பயங்கரவாதச் செயலாக பிரச்சாரப்படுத்தப்படுகின்றது. புலிகள் இராணுவம் படுகொலை செய்யும் படங்களை, செய்திகளை தொகுப்பின் இரண்டையும் பக்கம் பக்கமாக போட்டு இரண்டையும் எதிர்க்கும் போக்கில் விடுதலைப் போராட்டம் சிறுமைப்படுகின்றது. இது தொடர்பாக <u>சர்வதேச மன்னிப்புச்சபை எழுதிய கடிதத்திற்கு 10.7.95 இல் புலிகள் எழுதிய கடிதத்தில் சிங்கள மக்கள் மக்கள் மீதான தாக்குலை ஒரு இராணுவத்திற்கு எதிரான யுத்தத்தின் ஒரு பகுதியாக கூறி நியாயப்படுத்தி உள்ளனர்</u>. தமது தவறை மூடிமறைக்கக் கூட முனையாத இந்த நிகழ்வு அடிப்படையில் புலிகள் அம்பலப்படுதல் வேகமாவதை இனங்காட்டுகின்றன. சிங்கள மக்கள் மீதான தாக்குதல் ஒரு இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சி எனின் மாதாகோயில் பாடசாலை மீது குண்டு வீசுகின்றது இராணுவம், புலிகள் மீதான தாக்குதலின் ஒருபகுதி என நியாயப்படுத்தின் அத்துாக்குதல் நியாயமாகிப் போய்விடும் அல்லவா? இராணுவம், புலிகள் மக்கள் மீதான தாக்குதல் சமன்பாடு, விடுதலைப் போராட்டம் தனது தார்மீக ஆதரவு பலத்தைக் கூட இழந்து விடுகின்ற நிகழ்வு, புலிகளின் செயல்களை வேகப்படுத்துகின்றது. புலிகள் மீதான நிர்பந்தத்தால் அழுத்தத்தால் அதிகரிக்கும் வகையில் அவர்களின் நடவடிக்கைகள் இட்டுச் செல்வதுடன் ஒரு சரணடையும் பாதையை நோக்கி நகர்கின்றனர் அல்லது தனிமைப்பட்டு ஒரு இராணுவக் குழுவாக மேலும் சீரழிகின்றனர்.


இந்நிலையில் சர்வதேசரீதியாக உள்ள தமிழ் பேசும் மக்களை புலிகள் அண்மையில் பல போராட்டத்திற்கு இட்டுச் சென்றனர். இந்தப் போராட்டம் கூட எந்தப்பிறயோசனமும் அற்ற நிலைக்கு நகரும் வகையில் சிறிலங்கா இராணுவத்தின் வெற்றிற்காக உழைக்கும் மேற்கு நாட்டு அரசுகளிம் வேண்டுகோள், கோரிக்கைகள், மகஜர்கள் என்ற எல்லைக் கோட்டைத் தண்டிச் சென்று விடவில்லை என்பதைக் கவனிக்க முடியும்.

<u>மேற்கு நாடுகளின் புலித்தலைமை தனது சட்டபூர்வமான பூர்சுவா வாழ்நிலையை தகவமைக்கும் வகையில், இந்த அரசுகளின் நல்ல செல்லப்பிள்ளையாக மட்டும் இருக்க விரும்பியது துரோகத் தனமானதே. தமிழ் இனம் அழிக்கப்பட்டு, தமிழ் மண் சூறையாடப்பட்டும் . இன்றைய நிலையில் அதற்கான போராட்டம் என்பது உணர்ச்சியை வெளிக்காட்டும் வகையில் பொதுவாக இலங்கை தூதுவராலயம் நோக்கி நகர்த்தப்படல் வேண்டும்.</u> தமிழ் பேசும் மக்களின் மாற்றுக் கருத்து மீது புலிகளின் வன்முறையுடன் ஒப்பிடும் போது இரு இனத்தையே அழிக்கும் அரசின் தூதுவர்களை நோக்கி புரட்சிகரமான ஆர்ப்பாட்டத்தை நகர்த்த முடியாது போவதோன்.

இது ஒரு பாரிய எதிர்விளைவை சர்வதேசரீதியில் ஏற்படுத்தும். மற்றும் ஒரு இனம் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில் ஒரு பொதுவான அமைப்புக்கூடாக ஆர்ப்பாட்டத்தை கோராமலும், தனிமைப்பட்டுப் போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மற்றும் ஆர்ப்பாட்டத்தில் பிரபாகரனின் படம், இதுபோன்று பல சிறுபிள்ளைத்தனமான கோசங்களைப் தொடர்ந்து துாக்கப்படுவது போராட்டத்தின் நோக்கமே சிதறடிக்கப்படுகிறது. பிரபாகரனின் உயிரக்கு ஆபத்து எனின் படத்தை புலிகள் தூக்குவதில் ஒரு நியாயம் உண்டு. அதாவது போராட்டத்தின் எது பிரதான பிரச்சனையோ அதுவே கோசமாக இருக்க வேண்டும். அதைவிட்டு வேறு கோசங்களை முன்நிலைப்படுத்துவது எதிர்காலத்தில் அதையே பலவீனப்படுத்திவிடும் என்பது தான் உண்மை.

இதேநேரம் வெளிநாட்டில் புலிகள் சார்பாக உள்ள பத்திரிகைகள் தமிழ் பேசும் மக்கள் மீது ஒரு வீங்கிய பிரச்சாரத்தை தொடர்கின்றனர். தோல்வியை தோல்வியாகவும் வெற்றியை வெற்றியாகவும் இனங்காட்டி அதன் அடிப்படையில் ஒரு பலத்தைப் பெறுவதற்கு பதில் வீங்க வைத்த ஒரு பிரச்சார வடிவம் காணப்படுகிறது. ஒரு வெற்றி பலமாகவும், இறுதியானது எனக்காட்டுவது என ஒரு தொடர்ச்சியான கற்பனைகளை மக்கள் மீது ஏற்படுத்திவிடுகின்றனர். இது எதிர்காலத்தில் அவர்கள் என்ன சொன்னாலும் ஏற்க மறுக்கும் ஒரு பெய்மைக்குள் மக்கள் போய்விடுகின்றனர். இது எதிர்காலத்தில் விடுதலைப் போராட்டத்தை மீள முடியாத பின்னடைவுக்கு இட்டுச்செல்லும்.

முடிவாக யாழ்பாணத்தை கைப்பற்றுவதும் சரி, விடுதலைப் போராட்டம் வெல்வதும் சரி பணமே, ஆயுதமோ, நபரோ தீர்மானித்து விடமாட்டாது. மாறாக மக்களின் மனமொத்த ஒத்துழைப்பைப் பெறும் வகையில் மக்களின் ஜனநாயக உரிமையை வழங்குவதும், சிங்கள முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தி அவர்கள் மீதான கடந்த கால தவறுகளை ஏற்று சுயவிமர்சனம் செய்வதும், அதன் மூலம் அவர்களின் ஆதரவை, அனுதாபத்தைப் பெறுவது முக்கியமான தீர்க்கமான அம்சமாகும். இதைச் சர்வதேசரீதியாக கடைப்பிடிப்பதில் மட்டுமே எதிர்காலத்தில் விடுதலைப் போராட்டம் தனது சுதந்திரமான தாயகத்தை கோரும் தார்மீக கோரிக்கை பலம்பெறும். இதன் மூலம் பின்வாங்கும் தற்காப்பு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, முன்னேறும் அழிப்பு ஒழிப்பு யுத்தத்தை நடத்தி மண்ணை மீட்கமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com



1பக்க,தொடர்

இலங்கையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனஅழிப்பு முறையை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கு வேண்டும் என்றும், நவாலி, நாகர்கோவில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலின் வீடியோப் படத்தை நோர்வே நாட்டவர்களுக்கு தமிழ்சங்கத்தின் ஊடாக காண்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதோடு இதுதொடர்பாக படக்காட்சி உண்ணாவிரத நடவடிக்கைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.மறுநாள் இத்தீர்மானம் தொடர்பாக தமிழ்சங்க அங்கத்தவர்கள் பலரால் பல்வேறுபட்ட கருத்துக்கள் வினாக்கள் விவாதங்கள் எழுந்தன. வார்டோ தமிழ்சங்கத்தை ஆரம்பிப்பதற்கு ஆரம்பகர்தாக்களாக இருந்த சிலர் இத்தீர்மானத்தைக் கண்டித்ததோடு தமிழ் சங்கத்துக்குள் எவ்வித அரசியல் நடவடிக்கைகளையும் புகுத்துவதற்கு யாரும் எத்தணிக்கக் கூடாது என்றும், தாம் இச்சங்கத்தை ஆரம்பிக்கும் போதே இக்கருத்தை ஆணித்தரமாகக் கூறியதாகவும், இதை அன்று மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவர் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டதன் பெயரிலேயே தமிழ்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இதைவிட இன்று வார்டோ தமிழ்சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் தமிழர்கள் மட்டுமல்லாமல் தமிழ் மொழியைப் பேசுகின்ற முஸ்லீம்களும் , சிங்களவர்களும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நிர்வாகசபைத் தீர்மானம் தொடர்பாக படக்காட்சி உண்ணாவிரத நடவடிக்கைக் குழுவானது மிகவும் அவதானமாக நாகரீகமாக முறையில் மக்களை அணுகி மக்களிடையே காணப்படுகின்ற தவறான கருத்துக்களுக்கு தகுந்த விளக்கம் கொடுத்தன் பின்பு படக்காட்சியையும், உண்ணாவிரதத்தையும் அனைத்து வார்டோ தமிழர்களையும் ஒன்றிணைத்து நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. இதனால் நடவடிக்கைக் குழுவானது செயலாளர் அவர்களுடன் தலைவரைச் சந்தித்துப் பேசியது. தலைவர் அவர்கள் மக்களை சந்தித்துப் பேசுவதற்கோ, அவர்களுக்கு உண்மையான விளக்கத்தைக் கொடுப்பதற்கோ மறுத்துவிட்டார். உடனே நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி செயலாளரால் நிர்வாக சபை மாலை 7.30 மணிக்கு கூட்டப்பட்டது.

தலைவர் அவர்களின் உரையைத் தொடர்ந்து ஓர் நிர்வாக உறுப்பினர் அவர்கள் தனது கருத்தைத் தெரிவித்த போது கூறினார் "நிர்வாகத்தில் இருக்கும் சிலர் வேலைசெய்யும் தொழிற்சாலையிலே மக்களைக் கூட்டம் கூட்டமாக சேர்த்து இந்தப் படக்காட்சி உண்ணாவிரதம் தொடர்பாகக் கதைக்கின்றார்கள் அது மிகவும் தவறானது என்றும், இவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது இந்த விடையத்தை கூட்டம் கூட்டமாக கூடியிருந்து கதைப்பதற்கு என்றும்............" தொடர்ந்து பேசுகையில் "இங்கிருக்கும் சிலர் மீன் தொழிற்சாலைக்குச் சென்று தமிழ் மக்களுடன் இதுபற்றிக் கதைக்க வெளிக்கிட்டார்களாம் அது மிகவும் தவறானது என்று கூறிக் கொண்டதோடு இப்படிப்பட்டவர்களை தமிழ்சங்கத்தில் இருந்து விலக்குவது நல்லது" என்றும் கூறி தனது உரையை முடித்தார். மேலே குறிப்பிட்ட தமிழ் சங்க நிர்வாகியின் உரையில் இருந்து ஒரு தனிமனித ஆதிக்கம் ஒன்று தமிழ் சங்கத்திலேயே இடம் பெறுவதை யாரும் மறுக்க முடியாது. வார்டோ தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு தமிழ் மக்களுடன் இதுபற்றிக் கதைப்பதற்கு உரிமை இல்லையா? இலங்கையிலே தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டமிட்ட இனஅழிப்பை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கப் போகின்றோம். எமது தமிழ் மாணவர்கள், குழந்தைகள் பாசிச அரசின் குண்டுவீச்சுத் தாக்குதலால் சிதைக்கப்பட்ட எமது சிறுவர்களின் சடலத்தைத் தான் வீடியோப் படத்தின் மூலம் நோர்வே நாட்டவர்களுக்கு காண்பிக்கப் போகிறோம் என்று மக்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டும் வாருங்கள் என்று கேட்டது மாபெரும் தவறா? அல்லது குற்றமா? உண்மையிலே சுயமாகச் சிந்திக்கின்ற அறிவுள்ள, ஓர் தமிழ் மொழிபெயர்ப்பாளர் நிர்வாக உறுப்பினராக இருந்து கொண்டு கோட்கின்ற கேள்வியா? இது. தனது பதவியைக் காப்பாற்றுவதற்காகவும், தீனக்கு எதிராகத் திரும்புகின்ற தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை மறைத்துக் கொள்வதற்காகவும் இப்படிப்பட்ட முட்டாள் தனமான கருத்துக்களை உணர்ச்சி வசமான பேச்சின் மூலம் நிர்வாகசபையில் குழப்பத்தை ஏற்படுத்திய மொழிபெயர்ப்பாளர் மிகவும் விமர்சனத்திற்கு உட்படுத்தப் படவேண்டியவர் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு சுதந்திரமான "ஜனநாயக" நாட்டில் ஒரு மனிதன் சுதந்திரமாக தனது கருத்துக்களை மற்றய மனிதர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அவனுக்குச் சுதந்திரம் இல்லையா? உரிமை இல்லையா?

மொழிபெயர்பாளருடைய பேச்சைத் தொடர்ந்து செயளாளர் மக்கள் கருத்தை சபையிலே முன்வைத்தார். அப்போழுது சபையிலே கைகலப்புகள் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இதனாலே நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் எழுந்து வெளியேசென்றார். அவ்வுறுப்பினர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வார்டோ கிளைப் பொறுப்பாளரால் பாடசாலை வாசலிலே வைத்து தாக்கப்பட்டார். பின்பு தாக்கப்பட்டவர் பாடசாலை மண்டபத்திற்குள் வந்து கதிரையில் அமர்ந்தார். அப்பொழுது TCC பொறுப்பாளர் அவர்கள் ஓடி வந்து கதிரையில் இருந்த நிர்வாக உறுப்பினர் அவர்களை தள்ளி விழுத்தி மீண்டும் மிருகத்தனமாகத் தாக்கினார். உடனே தாக்கப்பட்டவரும் அதனை நேரில் கண்ட நால்வரும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நடைபெற்ற சம்பவத்தை பெலிசாரிடம் முறையிட்டனர்.

இன்று ஈழத்தில் நடந்து கொண்டிருக்கும் திட்டமிட்ட இனப்படுகொலையை எதிர்ப்பவர்கள் யார்? என்பதை வாசக நண்பர்களுக்கு கூறிவைக்க விரும்புகிக்றோம். 1992 ஆம் ஆண்டு பிரேமதாசா அரசு தமிழ் மக்கள் மீது நடத்திய தான்தோன்றித் தனமான தாக்குதலுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கப்பட்டது. இந்நிதிக்காக பல ஆயிரக்கணக்கான குறோணர்கள் வார்டோ தமிழ் மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டு சிறிலங்கா அரசுக்கு ஆயுதம் வாங்குவதற்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு இலங்கைத் தமிழர்களையும், புலிகளையும் ஒழித்துக்கட்டுவதற்கு வார்டோ தமிழர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். இதே தமிழர்கள் இன்று ஈழத்தில் நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராக நோர்வே நாட்டவர்களுக்கு தமது குரலை உயர்த்திக் காட்ட முயன்ற சம்பவமானது ஈழத்திலே புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எரிகின்ற நெருப்பிலே இருந்து கொண்டு குளிர்காய்கின்றார்கள் என்பதை எவ்வித சந்தேகமும் இன்றி நிருபிக்கின்றது.

யார் இந்த புலிகளால் தாக்கப்பட்ட மனிதன்? எதற்காகத் தாக்கப்பட்டார்? என்பதை வாசகர்களுக்கு தெரிவிப்பது நல்லது என்றே எண்ணுகின்றோம். வார்டோ வைத்திய சாலையில் பணிபுரிவதற்காக ஒன்றரை வருடங்களுக்கு முன்பு இங்கு வருகை தந்தவர் தான் இந்த புலிகளால் தாக்கப்பட்ட நபர். இவர் 1994 ஆண்டு வாடோவில் நடைபெற்ற மாவீரர் நாளிலேயே தீபமேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியவர். இவர் தனர் ஓய்வு நேரங்களை நோர்வேஜிய நண்பர்களுடன் கழிப்பது மட்டுமல்லாமல் நோர்வேஜிய அரசியல் கட்சியிலும் அங்கம் அகிக்கின்றார். கடந்த நகரசபைத் தேர்தலிலே கிறிஸ்தவ மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்டு தற்போது வார்டோ நகரசபையின் கலாச்சாரம், சமூகசேவைக்குப் பொறுப்பான நிர்வாகக் குழுவில் இருக்கும் நிர்வாக உறுப்பினராகக் காணப்படுகின்றார்.

இதனால் கடந்த காலங்களில் சமூக வேவை உத்தியோகஸ்தவராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் பக்களின் பிரதிநிதிகள் என்றும் தம்மை தாமே பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள். அப்பாவி மக்களையும், தமிழ் சங்கத்தையும் தமது சுயநல நோக்கங்களுக்காக பயன்படுத்தியது மட்டுமல்லாமல் நோவேஜிய அதிகாரிகளின் கைப்பொம்மைகளாக இருந்து அவர்கள் போட்ட தாளத்திற்கு ஆடிக் கொண்டு வெய்யில் காலங்களில் மலையில் பழுத்துக் காணப்படும் (Multebær) முல்ரபார் எனப்படும் ஒருவகைப் பழத்தை (Sosial sjefen) சமூகசேவை அதிகாரி போன்றோர்களுக்கு பறித்துக் கொடுத்து பந்தம் பிடித்துக் கொண்டு தமிழ் அகதிகள் உரிமைகளையும் சலுகைகளையும் குழிதோண்டிப் புதைப்பதற்கு காரணமாக இருந்த ஊழல் பல வெகுவிரைவில் அம்பலத்திற்கு வரும் அபாயம் ஏற்படவே, இந்த அபாயத்தில் இருந்து தன்னையும், தனது சகாக்களையும் காப்பாற்ற வேண்டுமாக இருந்ததால் வார்டோ வாழ் தமிழ் மக்களின் பெரும்பாண்மையானோரை தனது பக்கம் வைத்திருக்க வேண்டும் என மொழிபெயர்ப்பாளர் எண்ணியதோடு வைத்தியசாலையில் பணிபுரிபவரை வார்டோ தமிழ் மக்களிடம் இருந்து அன்னியப் படுத்த வேண்டும் எனவும் எண்ணினார். இதனால் வைத்தியசாலையில் பணிபுரிபவர் தான் புலிகள் பற்றிபலவாறாக விமர்சிக்கின்றார் என்ற வதந்தியை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பிவிட்டால் புலிகளுக்கு ஆதரவான தமிழ் மக்களிடம் இருந்து இவரை அன்னியப்படுத்தி தனக்கு சாதகமான ஒரு குழுவை அமைத்துக் கொள்வதோடு இக்குழுவை வைத்துக்கொண்ட தானும் தனது சகாக்களும் செய்த குற்றங்களை மறைத்துக் கொள்வதோடு பதவியையும் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று எண்ணிய அந்த மொழிபெயர்ப்பாளர் வதந்திகளைப் பரப்பிவிட்டார். இதனதல் வைத்தியசாலையில் பணிபுரிபவருக்கு எதிராகப் பலர் ஒன்று சேர்ந்தார்கள். இந்தவேளையில் படக்காட்சி, உண்ணாவிரதம் பற்றிய விமர்சனங்கள் மக்களிடமிருந்து எழுந்தபோது அந்த விமர்சனத்துக்குப் பொறுப்பானவர் வைத்தியசாலையில் பணிபுரியும் நபர் என்ற வதந்தியை மொழிபெயர்ப்பாளர் மக்களிடம் பரப்பிவிட்டதோடு வைத்தியசாலையில் பணிபுரிபவருக்கு நிர்வர்க சபைக் கூட்டத்தில் வைத்தோ அல்லது வெளியில் வைத்தோ அடிக்க வேண்டும் என திட்டமிடப்பட்டது. இதனால் இரகசியமாக ஐந்து மனித்தியாலத்துக்குள் கூட்டப்பட்ட நிர்வாக சபைக் கூட்டத்தில் எந்தவிதத்திலும் தொடர்பில்லாத வார்டோ கிளைப் புலிப்பொறுப்பாளரைப் பாவித்து மிருகத்தனமாகத் தாக்கினார்கள். வார்டோ தமிழ்சங்க நிர்வாக சபையில் இடம் பெற்ற இந்த விடையத்திற்கு நிர்வாகத்தில் உள்ள ஒருவர் அடிக்காமல் புலிகளை ஏன் தலையிட வைத்தனர் என்பது இங்கு உதயமாகும் ஒருகேள்வி? புலிகள் நிர்வாக சபைக் கூட்டத்திற்குள் நுழைந்து அடித்ததால் அச்செய்தியானது மறுநாள் நோர்வே நாட்டுப் பத்திரிகைகளில் பல்வேறுபட்ட விமர்சனங்களுடன் வெளிவரும் அப்படி வெளிவந்தால் வைத்தியசாலையில் பணிபுரிபவர் புலிகளைப் பற்றி கூடாமல் விமர்சிக்கின்றார் என்ற வதந்தியை உண்மையாக்கி உறிதிப்படுத்தலாம் என மொழிபெயர்ப்பாளர் எண்ணியிருந்தார். ஆனால் அவர் எண்ணியதற்கு மாறாக நடந்தது. பத்திரிகையில் செய்திகள் வராதபுடி பார்த்துக்கொள்ளப்பட்டது. புலிகளின் பெயர் இப்படிப்பட்ட பச்சோந்திகளால் பாவிக்கப்படக் கூடாது என்பதில் அவர்கள் உறுதிகாக நின்றனர்.

சம்பவம் நடந்து மறுநாள் காலை வார்டோக் கிளைப் புலிப் பொறுப்பாளர் அவர்கள் நடந்து கொண்ட மிருகத்தனமான முறைக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அப்படிக் கேட்டால் பொலிஸ் கோஸ் வாபஸ் பெறப்படும் என்றும் புலிப் பொறுப்பாளரிடம் கோட்கப்பட்டது. ஆனால் அதற்கு அவர்

படிப்பகம்

www.padippakam.com



விரும்பவில்லை. எப்படியாவது தான் செய்த பிழையை நியாயப்படுத்த வேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்தார். ஒரு சில தினங்கள் கழித்து வைத்தியசாலையில் பணிபுரிபவர் புலிப் பொறுப்பாளரை வீதியில் சந்தித்து "இங்கே வா தம்பி ஏன் அன்று பாடசாலைக்குள் நுழைந்து எனக்கு அடித்தாய்" என்று கேட்டபோது புலிப் பொறுப்பாளர் கூறினார் "நீங்கள் கொழும்பில் இறந்த சிங்களவரின் படங்களையும் போட்டுக் காட்டச் சொன்னீர்களாம்'' என்று இதிலிருந்து புலிப் பொறுப்பாளர் வதந்தியை எவ்வளவு துரம் நம்பியிருக்கின்றார் என்பது ஒருபுறமிருக்க சிங்களவரின் படங்களை போட்டுக் காட்டச் சொன்ன செய்தியை கோட்டு ஓடிவந்து மிருகத்தனமாகத் தாக்கிய புலிப் பொறுப்பாளருக்கு உண்மையில் உணர்வு பூர்வமாக சிந்திக்கின்ற ஓர் விடுதலை ஆதரவாளனாக அல்லது விடுதலை விரும்பியாக இருந்தால் வார்டோவில் மணித்தியாலத்திற்கு 100 குறோனர்களுக்கு மீன் தொழிற்சாலையில் நின்று மாரடிப்பதை விட்டுவிட்டு ஈழத்துக்குச் சென்று இனப்படுகொலைக்கு எதிராக துப்பாக்கி ஏந்தி போராடி இங்கிருக்கும் இளைஞர்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அல்லது வெளிநாடுகளில் வந்து அரசியல் தஞ்சம் கோருவதற்காக புலிகளை பயன்படுத்திய இவர்கள் புலிகளின் பெயரைச் சொல்லி ஒரு தமிழ் மகனுக்கு கையோங்கி அடிப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது? புலிகளைப் பற்றி கதைப்பதற்கு என்ன அருகதை இருக்கிறது. உண்மையில் நிர்வாக சபையில் எழுந்து சிங்களக் குழந்தைகளின் படத்தையும் காண்பிக்க வேண்டும் என்ற மக்கள் கருத்தை முன்வைத்தவர் தாக்கப்படாமல் வைத்தியசாலையில் பணிபுரிந்தவர் மௌனமாக இருந்தும் ஏன்தாக்கப்பட்டார்? இதிலிருந்து மொழிபெயர்ப்பாளருக்கும், வைத்தியசாலையில் பணிபுரிபவருக்கும் தனிப்பட்ட அல்லது வேறுபட்ட சமூகப் பிரச்சனையை திசைதிருப்புவதற்கு புலிக்குப் பொறுப்பான இளைஞனை ஒருகருவியாகப் பயன்படுத்தி இருக்கின்றனர் என்பது வாசகர்களுக்குப் புலனாகும்.

ஒரு சமூகத்திலே இடம்பெறுகின்ற பிரச்சனைகளை அரசியல் கண்கொண்டு நோக்காமல் வெறும் வதந்திகளை மட்டும் நம்பி பாடசாலை மண்டபத்திற்குள் நுழைந்து தமிழ் சங்க நிர்வாகியை தாக்கிய வார்டே கிளை புலிப்பொறுப்பாளர் மிகவும் கண்டனத்துக்குரியவரும், விமர்சிக்கப் படவேண்டியவருமாவார். அரசியல் அறிவற்ற வெளிநாட்டு புலிகளுக்கு நண்பர்கள் யார்?பகைவர்கள் யார்? என்பது இன்று புரியாது. நிட்சயம் ஒருநாள் புரிந்து கொள்வார்கள். அப்போது இந்தப் பச்சோந்திகள் யார் என்பதை ஈழத்தில் இருக்கும் மக்கள், போராளிகள் இனங்காண்பார்கள். அப்போழுது இந்தப் பச்சோந்திகள் தாம் அக்காலத்திற்கேற்ப நிறத்தைமாற்றி காட்சியளிப்பார்கள் என்பது மட்டும் நிட்சயம்.

1994 ஆன்டு வார்டோ தமிழர்கள் பலருக்கு நோர்வேஜிய பிரஜா உரிமை கிடைத்தது. இதனால் தமது மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏனைய தமிழர்களுடன் கலந்து கொள்வதற்காக தமிழ் மொழிபேசுகின்ற நோர்வேஜிய நாட்டவர்கள் இரவு நோரவிருந்தினை ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தின் போது நாம் மேற்கூறிய மொழிபெயற்பாளருடன் ஒரேவீட்டில் இருக்கும் நண்பர்கள் சிலர் மொழிபெயர்ப்பாளருக்கு அடிக்க வேண்டும் என்றும், கத்தியால் குத்தவெண்டும் என்றும் ஆரவாரம் செய்து கோசமிட்டனர். இச்சம்பவம் நடந்து அரைமணி நேரத்துக்குள் பொலிசாரால் இரண்டு இழைஞர்கள் கைது செய்யப்பட்டு இரவுக் காவலில் வைக்கப்பட்டதோடு தலா 5000, 2000 குரோணர்கள் தண்டமும் விதிக்கப்பட்ட செய்தி மறுநாள் நோர்வே நாட்டுப் பத்திரிகையில் வெளிவந்தது. அப்போழுது இந்த விடையத்தில் எந்தவிடையத்திலும் தொடர்புபடாத வார்டோ தமிழ்சங்கம் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று பொலிசாரைச் சந்தித்துக் கதைத்தது ஆனால் 24.10.95 அன்று பாடசாலை மண்டபத்தில் தமிழ் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் எவ்வித அனுமதியுமின்றி பாடசாலை மண்டபத்திற்குள் நுழைந்து கதிரையில் இருந்த நிர்வாகி ஒருவரை மிருகத் தனமாகத் தாக்கிய சம்பவம் பற்றி என்ன நடவடிக்கை எடுத்தது? இதுபற்றி பொலிசாரிடம் முறையிட்டும் கூட தமிழ் சங்கம் ஏன் தலையிடாமல் இருந்தது? இந்த மிருகத் தனமான தாக்குதல் பற்றி தமிழ் சங்கம் ஏன் மௌனமாக இருந்தது? போன்ற கேள்விகளை வாசகர்களுடாக தமிழ்சங்கத்தைக் கோடகின்றோம்.

அறநீதிக்குழு
வடநோர்வே

அறநீதிக் குழுவால் எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தினை நாம் பிரசுரிக்கின்றோம் காரணம் என்னவெனில் வெளிநாடுகளில் புலிகள் பெயரால் பலதவறுகள் சுயநல அடிப்படையில் சில தனிநபர்களால் நிகழ்த்தப்படுகின்றது. எமக்கு புலிகள் மீது அரசியல் ரீதியான விமர்சனம் உள்ள போதும் புலிப்போராளிகளின் தியாகங்களை மதிக்கின்றோம். இதனடிப்படையில் வெளிநாடுகளில் புலிகளின் பெயரையும் போராளிகளின் தியாகத்தையும் தமது நலனிற்கும் தனிப்பட்ட குரோதங்களைத் தீர்த்துக் கொள்ளவதற்கு பாவிக்கும் சில தனிநபர்களால் கண்மூடித்தனமான புலிஎதிர்ப்பு வளர்ந்த வண்ணம் உள்ளது. இந்த நிகழ்ச்சி புலிகளை மட்டும் அல்ல சுயநிர்ணய உரிமைப் போரையும் பாதிப்பிற்குள்ளாக்கும். மேற்படி வார்டோ நிகழ்வை வன்மையாகக் கண்டிப்பதுடன் ரி.சி.சி நோர்வே கிளையினரின் தமது உறுப்பினர் மீதான விமர்சனத்தையும் எதிர்பார்க்கிறோம்.
சுமைகள்

# இயந்திர மனிதர்கள்

ிண்டைக்கு என்ன திகதி, 14 ்பால சிலவேளை அம்மா வந்து ிடிய ரெலிபோன் எடுத்தாலும் ாதுக்கும் ரெலிபோனையும், ்பனை, பேப்பரையும் பக்கத்திலை ைவச்சிட்டுச் சரிவம். போனமாதம் ிப்படித்தான் ஒரு ஞாயிற்றுக் ிழமை விடிய ரெலிபோன் அடித்தது. அரக்க பரக்க எழும்பி றலோ சொன்னா அது கனடாவில் ிருந்து ஒருத்தன். என்ன என்டு கட்டால் வேலை முடிஞ்சு வீட்ட பாகக்கை என்ர ஞாபகம் ந்ததாம். இந்த தூர இடத்து ரலிபோன் கோல்களில் ஒரு வசதி ன்னவெண்டால் கனக்கக் தைக்கத் தேவையில்லை. க்கியமான விடையம் மட்டும். ண்டைக்கு ஒரு ஞாயிற்றுக் ிழமையும் அதுவும் ாலங்காத்தால ரெலிபோன் டித்தது, அங்கே இருந்தவர் ம்பரைச் செல்ல நான் ழுத்தியபோது அம்மா தாண். ப்படி சுகமா இருக்கிறியே" ம் உங்கட பாடுகள் எப்படி" அப்பாவை கிளினிக்கு ட்டிவந்தனான், உன்னோடையும் தைக்கலாம் எண்டு எடுத்தனான். ப்படி உன்ர படிப்பு? எப்ப டியுது? நீ ஒரு படமும் அனுப்பேல்ல. இஞ்ச ரஞ்சியின்ர தமையன் சுவிஸில இருந்து வடிவு வடிவா படம், ஒரு தொகைப் படம் அனுப்பியிருக்கிறான். நல்ல வடிவாத் தான் கிடக்கு. நல்ல நல்ல இடங்களிலெல்லாம் நிண்டு மனிசியோட ..........."

அம்மாவின் பரிதவிப்பு எனக்குப் புரிகிறது.

"எனக்கு நேரம் இல்லை அம்மா, லீவுவரட்டும் எடுத்தனுப்பிறன்."

"இஞ்ச எல்லாரும் நீ என்ன படிக்கிறாய் எண்டு கேக்கினம், இன்னும் எத்தனை வருசம் இருக்கு?

"இன்னும் 3 வருசம் இருக்கு, அக்கா எப்படி சுகமா இருக்கிறாவே?" நான் என்னைப் பற்றி படிந்திருக்கும் கவனத்தை சற்று நகர்த்த உதவும் என்ற நினைப்பில் கேள்வியை எழுப்புகின்றேன்.

"ஓம் அவவுக்கு இப்பதான் ஒப்பிரேசன் செய்து கருப்பை எடுத்துப் போட்டினம், பாரதுரமான ஒப்பிரேசன் தாண். சுகமா எழும்பின பிறகேல்லோ, நான் போக அவள் இனி தான் பிள்ளையும் பெற ஏலாது எண்டு சொல்லி அழுதாள். என்ன செய்யிறது, நான் சொன்னேன், இஞ்ச நாங்கள் பெத்துப் போட்டு ஒண்டை அந்த ஆமிக்கும், மற்றத் இந்த ஆமிக்கும் இரைகொடுத்துப் போட்டு மிச்சத்தை அள்ளி அனுப்பிப் போட்டு தனியா கிடக்கல்லையே, இருக்கிறதை விட இல்லாமல் போனா, இல்லை என்ட கவலை மட்டும் தானே"

அம்மாவின் இந்த விரத்தியான பேச்சு எங்கட குடும்பத்திற்கானது மட்டுமல்ல சுற்றியும் பலருக்கு இதுதான். நான் இன்னும் இரண்டொரு சொந்தங்களை விசாரித்தபடி ஊர்பிரச்சனைக்குப் போகிறேன்.

"ஊரில என்ன மாதிரி இப்ப?"

''இஞ்ச ஒண்டும் சரியில்ல. கண்டபடி கதைக்கேலாது, நீ இஞ்சாலப் பக்கம் வர யோசிக்காதை" சட்டென்று அம்மா சம்பாசனையை முறித்து

சரிஅப்ப நான் வைக்கிறன்,

அப்பாக்கு என்ன சொல்ல?"

''சுகம் கேட்டதெண்டு சொல்லங்கோ"

"இடைக்கிடை கடிதம் போடு"

நான் ரெலிபோனை வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தேன். வேலைக்கு வெளிக்கிடுவம். ஒரு எக்ஸ்ரா வக்த் எடுத்து செய்வோம். இனிகொஞ்ச நாளைக்கு அம்மான்ர குரலும் ஊர்நினைவும் சுத்திச் சுழண்டு கொண்டு நெஞ்சில் நிறைந்தவையாக.

இந்த ரெலிபோன் தொடர்பு சரிவந்த பிறகுஅம்மா கதைக்கிற நேரத்தின்ற அரைவாசி குற்றப்பத்திரிகை வாசிப்பதில் போய்விடும். பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கும் பெற்றோர்களுக்கு எத்தனையோ அங்கலாய்புகள். எப்ப பிள்ளைக்கு வேலை கிடைக்கும், கடன் கொடுத்து முடித்து மூத்த மகளுக்கு கலியாணம் பேசி, என்ற தொடர் சங்கிலியாக நீளும் அதேநேரம் ஒழுங்காய் சாப்பிடுறாயா? கெட்டபழக்கங்களைப் பழகிப் போடாதே, தனிய இறச்சிய சாப்பிடாத என்ற நீண்டதொடர். சிலநேரங்களில் அம்மாவின்ர அங்கலாப்புக்கள் சம்மந்தமாக கவலையும், அநுதாபமும் வரும். சிலவேளைகளில் எரிச்சலையும் ஏற்படுத்தும். இந்தப் பத்து வருட காலத்தில் நலம், நலமறிய ஆவல் என்ற வரிகளை திரும்பத் திரும்ப எனக்கு எழுத ஏலாமல் போனதினாலை நான் வீட்டிற்கு கடிதம் போடுறதை நிற்பாட்டிட்டன். இதனால வீட்டுக்காறர் ரெலிபோன் எடுக்க வெளிக்கிட்டினம். போறமாதிரியைப் பார்த்தால் ரெலிபோனில கூட சுகமாக இருக்கிறன் நீங்கள் சுகமா என்ற பாணியில் சம்பாசனை முடிந்துவிடும் மாதிரித் தெரிகின்றது. இன்னும் கொஞ்ச நாளில ரெலிபோனில கதைக்கக் கூட வசனம் இல்லாம போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை

பெற்று வளர்த்த தாய் தகப்பனுடன் கதைக்க கதை இல்லாமல் போச்சு. நண்பர்களோட கதைக்க விடையம் இல்லை. தெரிந்தவர்களுடன் சுகம் விசாரிப்பு, குழந்தைகள், மனைவி, வேலை அல்லது பள்ளிக்கூடம் பற்றியவை. இதுக்குப் பிறகு ஆளையாள் முகத்தைப்பார்க்க வேணும். வீடுகளுக்குச் சென்றாலும் நிலை ஒன்றும் பெரிதாக வேறுபடவில்லை. முகத்தை முகத்தை பார்க்க வேண்டும். அல்லது ரீவி பார்க்க வேணும். கொஞ்ச நேர மௌனத்தைத் தாங்காலாமா? யாராவது கதைக்கத் தொடங்குவோம். என்னுடைய

படிப்பகம்

www.padippakam.com



**AVSENDER / FROM:**
**Sumaihal**
**postboks: 415**
**9001 TROMSØ**
**NORWAY**

# BLAD:

**MOTTAKER / TO:**

7பக்கத் தொடர்

வீட்டிற்கு வந்திருந்தால் நான் கதைக்க வேணும் என்ற கடமையுணர்வு ஊறுத்த காலநிலை, வெள்ளம், உள்ளுர் அரசியல், சாமான் விலை, கோப்பிய ரீயா குடிப்பது என்ற விசாரணைகள் இதுக்கு மேலே நரகமாகிறது.

பள்ளிக் கூடத்தில் ஏதாவது மறுதலையாய் இருக்கும் என்றால் "கை" சொல்லி சுகம் கோட்டு பள்ளிக்கூடம் பற்றி கொஞ்சம் கதைத்து அந்தப் பேப்பரில் வந்த "சமூகப் பின்னணியும் குற்றச்செயல்களும்" என்ற கட்டுரை வாசித்தனிங்களா? ஓம் அவர் செல்லுறது சரி. எங்கட கண்ணுக்கு முன்னாலேயே தெரியுது இந்த மூன்றாம் உலக நாட்டுக்காறர் என்ன செய்யினம் என்று தொடர அந்த ஆக்கத்தில் உண்மைக்குப் புறம்பாக இடம் பெற்ற விடையங்களை சுட்டிக்காட்டி விளக்கம் சொல்லிக் கொண்டுடிருக்கையில "இல்லை இந்த புள்ளி விபரங்கள நான் நம்புகிறேன்" என்று தன்னுடைய வாழ்கையில் நடந்த ஒரு சம்பவத்தை உதாரணமாக, உணர்ச்சியுடன் பதில் கூற முனைந்து விவாதம் ஓர் இறுக்கமான நிலையில் வந்து நிற்கும். இது இப்போ சாதாரண நிகழ்வு.

உறவுகளோட, நண்பர்களோட கதைக்க விடையங்கள் இல்லாம போய்விட்டது. என்னோட கதைக்க மட்டும் நிறைய இருக்கிற மாதிரி ஊரில இருக்கக்கை இப்படி எப்பவாவது வந்த ஞாபகம் இல்லை. இந்தச் சூழ்நிலை என்னை மட்டும் தான் இப்படி ஆக்கியிருக்கிறதா? அல்லது என்னைப் போல இன்னும் கனபேர் இருக்கினமா? யாருக்குத் தெரியும்? "நான் கூர்படைந்த மனிதனாகிக் கொண்டிருக்கிறேனா? இப்போதைக்கு இதுகளைத் தள்ளி வைப்பம் சோதனை வருகுது இன்னும் 430 பக்கம் புறட்டாமலே இருக்கு. சனிக்கிழமை செமினாருக்குப் போனா நல்லம்.

இவ்வாக்கமானது தற்போது புலம்பெயர்ந்த நாடுகளில் நாளந்தம் நடக்கும் சில விடையங்களை எடுத்துக் காட்டுகின்றது. இங்கு வந்து ஒவ்வேரு மனிதரும் எவ்வாறு இந்த இயந்திர வாழ்கையினுள் தள்ளப்படுகின்றனர் இதனால் ஒவ்வேரு மனிதனிடையேயும் காணப்படும் விரக்தித்தன்மையையும், மற்றவர்களுடன் நாளுக்கு நாள் ஏற்படும் முரண்பாடுகளையும் அதற்குக் காரணமான இச்சமூக வெளிப்பாட்டையும் வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

சுமைகள்

அன்பான வாசகர்களே

தயவுசெய்து மனமுவந்து உங்கள் சந்தாப் பணத்தை எமக்கு அனுப்பி வையுங்கள். உங்களது உதவி நாம் கடனாளியாவதைத் தடுப்பதுடன் தொடர்ந்தும் சுமைகள் வெளிவர உதவும்.

எமது வங்கி கணக்கிலக்கம்
82454059545

எமது தபால் வங்கிக் கணக்கிலக்கம்
08260868293

எமது விலாசம்
Postboks 415, 9001 Tromsø

மீண்டும் 1996சந்திப்போம்

நன்றி

1பக்கத் தொடர்

கிட்டத்தட்ட மூன்று லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் குடாநாட்டை விட்டு வன்னிப் பிரதேசத்திற்கு புலம்பெயர்ந்துள்ளனர். இப்புலம்பெயர்வில் யாழ் குடாநாட்டைஅண்டியுள்ள நீர் நிறைந்த பிரதேசங்களைக் கடக்கும் போது வெள்ளம் காரணமாக பலர் உயிர் இழந்துள்ளனர். மேலும் அரசின், மக்கள் கூட்டத்தின் மீதான விமானத் தாக்குதலில் பலர் உயிர் இழந்ததுடன் பலர் படுகாயப்பட்டும் உள்ளனர்.

தற்போது மீதாக ஒரு லட்சம் மக்கள் யாழ் குடாநாட்டினுள் உள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மக்கள் எவ்வித உதவியும் இன்றி உணவு, மருந்து, மற்றும் அத்தியாவசிய தேவைக்கான பொருட்கள் ஏதும் இன்றி திண்டாடுகின்றனர். வன்னிப்பிரதேசத்தினுள் புலம்பெயர்ந்தவர்களைப் பொறுத்தளவில் சிறு உதவிகள் சில சர்வதேச இஸ்தாபனங்களால் வழங்கப்பட்ட போதிலும் இன்னும் ஓர் சீரான குடித்தன நிலைக்கு வந்து சேரவில்லை. பலகுடும்பங்கள், குடும்ப உறுப்பினர்களை (தாய், தந்தை, குழந்தைகள், உறவினர்) தேடியவண்ணம் உள்ளனர். இறந்தனரா அல்லது வேறு இடத்தில் உள்ளனரா எனத் தெரியாத நிலையில் மக்கள் உள்ளனர். இந்நிலையில் மக்கள் சீரழிந்து நிலை குலைந்த போதும் உளவியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புலிகள் மக்கள் மீது செலுத்தி வரும் கண்மூடித்தனமான கட்டுப்பாடும், பாஸ் வழங்குதல் , தண்டம் வசூலித்தல், பணம், நகை, பொருட்களை வரியாகப் பெறுதல் போன்ற நடவடிக்கைகளை இன்னும் நிறுத்தவில்லை.

மக்கள் குடாநாட்டில் வசித்த போது, எந்தவகையான புலிகளின் அதிகாரக் கட்டமைப்பு மக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததோ அதே கட்டமைப்பு தற்போதும் மக்களைத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. உத்தாரணமாக மடுப்பிரதேசத்தில் அகதிகளாகப் புலம்பெயர்ந்துள்ள மக்கள் வவுனியா சென்று மருந்தோ அல்லது வேறு அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனில் புலிகளிடம் பாஸ் பெறவேண்டியுள்ளது. இப்பாஸிற்காக அனுமதிப் பத்திரம் நிரப்புவதுடன் சாட்சிகளையும் முன்நிறுத்த வேண்டும். இல்லையேல் பாஸ் கிடையாது. மேலும் வெளிநாடுகளில் பிள்ளைகள் உள்ள பெற்றோர் (பிள்ளைகளுடன் தொடர்பு உண்டோ இல்லையோ) புலிகளுக்கு வருடாந்த வரி செலுத்த வேண்டியுள்ளது. உடுக்கத் துணியில்லாமல் புலம் பெயர்ந்த போதும் சாப்பாடு இல்லாமல் கஸ்டப்பட்ட போதும், வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லாத போதும், பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கின்றார்கள் என்ற குற்றத்திற்காக பணம் செலுத்த வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மொத்தத்தில் புலிகள் யாழ் நகரையும், அயல்பிரதேசத்தையும் இராணுவத்தினரிடம் இழந்துள்ளனரே ஒழிய மற்றும் படி அவர்களின் குட்டி அரசாட்சி (பாசிச அரசாட்சி), அதிகாரம் மற்றும் அதிகாரக் கட்டமைப்பு இன்னும் தளர்த்தப்படவில்லை. இவ்வாறு மக்கள் மீது செலுத்தப்படும் அநாவசிய அதிகாரப் பிரயோகமானது குறுகிய காலப் போக்கில் புலிகளின் நலனைப் பாதுகாக்க வளிவகுத்த போதும் நீண்ட காலத்திற்கு, எதிர்கால நலனிற்கு புலிகளுக்கோ அல்லது போராட்டத்திற்கோ எந்தவிதத்திலும் நல்லதல்ல. உணர்வை இழக்கவைத்து தாம் சொன்னபடி மக்களை ஆட்டி வைத்தால் மக்கள் நீண்டகாலப் போக்கில் சக்தி அற்றவராவார்கள். ஏன் தமிழீழம் கிடைத்தல் (?) கூட சுயமாக இயங்காமல் அதிகாரவர்க்கம் எவ்வாறு கட்டளை இடுகின்றதோ அதற்கிணங்க செயற்படுவார்கள். உண்மையில் புலிகளின் அரசியல் அடிப்படை மேற்கண்டவாறு தலையாட்டிப் பொம்மைகளையே விரும்புகின்றது. உணர்வை இழந்து சுயம் இழந்த மக்கள் எதையும் சாதித்து விடப்போவதில்லை. மக்களை மந்தைகளாக நினைத்து அரசியல் நடத்தும் போக்கு புலிகளுக்கு மட்டும் அல்ல யாழ்பாண மேலாதிக்க வர்க்கத்தின் கருத்தியல் அடிப்படையில் உருவான அரசியல் கட்சிகள், இயக்கங்கள் அனைத்திற்குமே பொதுவானது.

எமக்கு வாக்களித்தால் போதும் தமிழீழம் உடனே வந்துவிடும் எனப் பிரச்சாரம் செய்த கூட்டணியும், மக்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை "பெடியள்" போராடித் தமிழீழம் பெற்றுத் தருவார்கள் என்ற அரசியல் பேச்சுக்களும், வாக்குறுதிகளும் எல்லோருக்கும் ஞாபகத்தில் இருக்கலாம். இன்னொரு புறத்தில் "யாழ்பாணத்தானை அடக்கி வைத்தால் தான் சிலவிடயங்களைச் செய்து முடிக்கலாம் இல்லாவிட்டால் எல்லாத்தையும் காட்டிக் கொடுத்து அழித்துவிடுவான் அல்லது விற்றுவிடுவான்" எனும் நியாயப்படுத்தும் கருத்துக்கள் புலிகளாலும், சில பிரமுகர்களாலும் சொல்லப்பட்டு வருகின்றது. இதில் உண்மை என்னவெனில் அடக்கி வைக்கப்பட வேண்டிய யாழ்பாண மேலாதிக்க வர்க்கமும், அதன் ஆதிக்க வாதிகளும் இன்று யாழ்பாணத்திலோ அல்லது தமிழீழப் பிரதேசத்திலோ இல்லை. இவர்கள் எல்லோரும் வெளிநாடுகளிலும் அல்லது கொழும்பிலும் சீவிக்கின்றனர். மீதமான ஒடுக்கப்பட்ட மக்களே புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளனர். இவர்கள் எந்தக்காலத்திலும் தப்பியோட முயலாதவர்களும், விரும்பாதவர்களும் ஆவர். உண்மையான விடுதலை விரும்பிகளும், உண்மையில் ஒடுக்குமுறையையின் அனைத்துக் கொடுமைகளையும் அனுபவிப்பவர்கள் இவர்களே ஆவர். இம்மக்களை மீண்டும் மீண்டும் ஒடுக்குவது புலிகளுக்கும் அல்லது போராட்டத்திற்கும் எந்தவிதத்திலும் நீண்டகாலப் போக்கில் நன்மை பயக்கப் போவதில்லை.

மேலும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் இதற்கு எதிரானவர்கள் துரோகிகள் (அதாவது புலிகளை ஏற்காதவர்கள் அனைவரும் துரோகிகள்) என்னும் கருத்திற்கிணங்க வெளிநாடுகளிலும் புலிகளின் பிரமுகர்கள் இயங்குகின்றனர். இச்செயற்பாடும் வெளிநாடுவாழ் தமிழ் மக்களின் சிறிதளவிலானதான போராட்ட உணர்வையும் சாகடிக்கின்றது. இலங்கையில் நடக்கும் யுத்தத்திற்கும், தமிழ் மக்களிற்கும் ஏதாவது வெளிநாடுகளில் யாராவது செய்ய முற்பட்டால் (TCC) தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு ஊடாகவே செய்ய வேண்டும் இல்லையேல் 1)கொலை செய்யப்படுவார் 2)உடல் ஊனமாக்கப்படுவார் 3)தாக்குதல் நிகழ்த்தப்படும் (அடி, உதை) 4)துரோகிப்பட்டம் வழங்கப்படும் 5)செய்யப்படும் காரியம் பலவழிகளில் தடுத்து நிறுத்தப்படும்.

தமிழ் மக்களின் அழிவு நிறுத்தப்படவேண்டுமானால் எல்லாவகைக் கருத்துடையவர்கள் அனைவரும் குறைந்தபட்சம் சர்வதேச ஆதரவை தமிழ் மக்கள் மீது குவிக்கும் அடிப்படையிலாவது இணையும் நிலமை மேற்படி புலிகளின் நலன்விரும்பிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு வருகின்றது. இதுவும் நீண்ட காலப்போக்கில் போராட்டத்தினையும், மக்களின் ஆதரவினையும் குறைக்கும் நிலை ஏற்படுத்தும், ஏற்படுத்தியும் உள்ளது. இங்கு புலிகளின் பிரதிநிதிகள் "நீங்கள் காசு தந்தால் போதும் நாங்கள் தமிழீழம் காட்டுகிறோம், நீங்கள் நாம் செல்லும் போது மட்டும் ஊர்வலத்திற்கு வந்தால் போதும் மற்றும்படி வாய் திறக்கத் தேவையில்லை............" என்னும் கருத்தின் அடிப்படையிலேயே இயங்குகின்றனர்.

இந்நிலை மாற்றப்படவேண்டும்! புலிகள் தேசத்தில் செய்வது போன்று இங்கும் மக்களின் சுயசிந்தனையிலான ஆதரவை இழக்கவைக்கும் நிலையை உருவாக்கிவருகின்றனர் . தமிழ் மக்கள் மீதான தாக்குதலை எதிர்த்து ஊர்வலம் செய்யப்புறப்பட்டவர்கள் புலிகளின் கையாட்களால் தாக்கப்பட்டனர். இது போராட்டத்தை பலவீனப்படுத்தும். இன்று முரண்பாடுகளைத் தள்ளி வைத்து விட்டு குறைந்த பட்சம் சர்வதேசக் கவனத்தை மக்கள் மீது திருப்பும் அடிப்படையிலாவது அனைத்து சக்திகளும் இணைய வேண்டும். இதற்கு புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் ஜனநாயக அடிப்படையில் முரன்பாடுகளைத் தள்ளி வைத்து விட்டு மக்களுடனும் , மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுடனும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

படிப்பகம்